Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 300 | திங்கட்கிழமை | புரட்டாதி 11 ஆம் நாள் 27 செப்ரெம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்:16 விலை : ரூ.30

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## போதுமான எரிபொருள் கையிருப்பில்

கொழும்பு, செப்.27
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் அடுத்த ஒரு மாதத்துக்கான எரிபொருள் இருப்பு உள்ளது என்று இலங்கை பெற்றோலியக் 15

### தமிழர் தாயகத்தில்

# தடைகளைத் தாண்டி திலீபனுக்கு அஞ்சலி!



யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 27
இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த தியாகி திலீபனின் 34ஆவது ஆண்டு நினைவேந்தல் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. 15



## நாட்டின் அடுத்த நகர்வை ஒக்ரோபரே தீர்மானிக்கும்

கொழும்பு, செப்.27
ஒக்பரோபர் மாதம் பதிவாகும் கொரோனா நிலைமைகளே அடுத்துவரும் மாதங்களில் நாட்டின் நிலைமையைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும், இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா 15

## ஐந்தாவது அலையை தடுப்பதே பிரதானம்!

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப்.27
நாட்டைத் தொடர்ந்து முடக்கி வைத்திருக்க முடியாது. அதேநேரம் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டவுடன் ஐந்தாவது அலை ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டியதும் முக்கியமானது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.
ஊடகங்களுக்குக் கருத் 15

## ஐ.எஸ் அமைப்பின் 'இன்ரர் ஸ்கூல்' இலங்கையில்!

கொழும்பு, செப்.27
ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புபட்ட, இலங்கையில் இருந்து 15

## தவறணைகளை திறப்பதற்கு அனுமதி

சாவகச்சேரி, செப்.27
யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கள்ளுத் தவறணைகளும் நேற்றுமு 15

## விலைகளைத் தீர்மானிக்க இன்று கூடுகிறது உபகுழு!

கொழும்பு, செப்.27
அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றின் விலைகள் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்காக வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழு, பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் இன்று கூடுகின்றது. இந்தச் சந்திப்பு அலரி மாளிகையில் முற்பகல் 10 மணியளவில் 15

## சிவப்பு பட்டியலில் இருந்து விடுபட்டது இலங்கை

கொழும்பு, செப்.27
டெல்டா திரிபு பரவலை அடுத்து சிவப்பு எச்சரிக்கைப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்த இலங்கை, தற்போது அதில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது என்று 15

## பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு புலம்பெயர் தமிழர்கள் தேவை!

### அரசு கூறுகின்றது

கொழும்பு, செப்.27
இலங்கையில் உள்ள அரசியல் பிரச்சினை உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கு புலம்பெயர் தமிழர்களின் ஒத்துழைப்பும், பங்களிப்பும் மிக அவசியம். புலம்பெயர் தமி 15

## தொண்டைமானாறு நீரேரியில் இத்தியடி முதியவரின் சடலம்!

யாழ்ப்பாணம், செப்.27
தொண்டைமானாறு கடல் நீரேரியில் முதியவர் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை கண்டெடுக்கப்பட்டுள்ளது.
வல்வெட்டித்துறை, இத்தியடியைச் சேர்ந்த கந்தையா தேவராசா (வயது-76) என்ற முதியவரே சடலமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளார்.
சடலமாகக் 15



## கொரோனாத் தொற்றால் 71 பேர் சாவு

கொழும்பு, செப்.27
நாட்டில் நேற்றுமுன்தினம் 71 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. 15

## வாகன இறக்குமதிக் கட்டுப்பாடு டிசம்பரின் பின்னர் தளர்வு?

கொழும்பு, செப்.27
நாட்டில் தற்போது வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது தொடர்பில் எதிர்வரும் டிசம்பர் மாதம் தீர்மானம் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பயணிகள், பஸ் ஊழியருக்கான சுகாதார நடைமுறை அறிவிப்பு!

**கொழும்பு, செப்.27**
**ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் தனியார் பஸ்களில் பயணிகள் மற்றும் ஊழியர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர்கள் அமைப்பு வெளியிட்டுள்ளது.**

ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் தனியார் பஸ்களில் பணிபுரியும் ஊழியர்கள் கொவிட் தடுப்பூசியின் 2 டோஸ்களையும் பெற்றிருப்பது கட்டாயமாகும் என்று அமைப்பின் தலைவர் நிலந்த ஏக்கநாயக்க கூறினார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச்சட்டம் நீக்கப்படும்போது, வீதிப் போக்குவரத்து அதிகார சபையின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்ட பஸ்களின் செயல்பாடு தொடர்பாகத் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு தம்புள்ளையில் இடம்பெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது பஸ் ஊழியர்கள் மற்றும் பயணிகள் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பஸ் நடத்துநரே அதற்குப் பொறுப்பாக இருக்க வேண்டும். ஆசன எண்ணிக்கைகளுக்கு அமைய மாத்திரமே பயணிகள் பயணிக்க வேண்டும். அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரிகின்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். கூடுதலான கட்டணம் அறவிடக் கூடாது. பஸ்களில் யாசகம் பெறுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

பஸ்ஸில் வெற்றிலை மெல்லுதல் மற்றும் புகைப்பிடித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. அதன் முழுப் பொறுப்பும் நடத்துநருக்கே உள்ளது.

இந்தப் புதிய விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கண்காணிப்பதில் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் பரிசோதகர்கள் நாடுபூராகவும் சிவில் உடையில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். என்றார். (எ-இ)



## தனியார் பஸ் உரிமையாளர்கள் 17,000 பேருக்கு நிவாரணப்பொதி

கொழும்பு,செப்.27
கொரோனாத் தொற்றால் சேவை பாதிக்கப்பட்டுள்ள, தனியார் பஸ் உரிமையாளர்களில் அனுமதிப்பத்திரங்களுடைய 17 ஆயிரம் பேருக்கு நிவாரணப் பொதிகள் வழங்கப்படவுள்ளன என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். கொழும்பு மற்றும் கண்டி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு முதற்கட்டமாகவும், ஏனைய மாவட்டங்களுக்கு அடுத்த கட்டமாகவும் பொதிகள் வழங்கப்படும்.

அதேவேளை நாடு வழமைக்குத் திரும்பும் பட்சத்தில், சுகாதார அமைச்சின் கோரிக்கைக்கு அமைவாக, போக்குவரத்துச் சேவையை மேற்கொள்வதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

சாரதிகளும், நடத்துநர்களும் கொரோனாத் தடுப்பூசி பெற்றிருத்தல், பயணிகள் தடுப்பூசி ஏற்றியிருத்தல், ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக பயணிகளை ஏற்றிச்செல்லல் உள்ளிட்ட பல விடயங்களை உள்ளடக்கி புதிய போக்குவரத்துத் திட்டம் வகுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)



## வெளிவிவகார அமைச்சர்கள் சந்தித்துப்பேச்சு

நியூயோர்க், செப். 27
ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 76ஆவது அமர்வில் கலந்துகொள்வதற்காகச் சென்ற வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், தென்னாபிரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி நலேடி பண்டோர் ஆகிய இருவரும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: இரு நாடுகளுக்கும் இடையிலான நெருக்கமான மற்றும் நட்பான இருதரப்பு உறவுகளை அமைச்சர்கள் நினைவு கூர்ந்தனர்.

தனது கலாநிதிக் கற்கைக்காக தென்னாபிரிக்கப் பல்கலைக் கழகங்களுக்குச் சென்று அரசியலமைப்புச் சட்டம் குறித்த தொடர் விளக்கக் கல்வியமர்வுகளை நடத்தியமை முதல் தென்னாபிரிக்காவுடனான தனது நீண்டகால தொடர்பை அமைச்சர் பீரிஸ் நினைவு கூர்ந்தார். தென்னாபிரிக்காவின் முன்னணி அமைச்சர் துல்லா ஓமர் மற்றும் நிறவெறி அரசாங்கத்திற்கு எதிரான சுதந்திரப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்த முன்னணி நபர்களான ரோல்ப் மேயர் மற்றும் இப்ராஹிம் ஆகியோருடனான அவரது நெருங்கிய நட்பையும், உயர்மட்ட விஜயங்களையும் அமைச்சர் நினைவு கூர்ந்தார் என்றுள்ளது. (ம)

உயர்கல்விக்காக

## வெளிநாடு செல்வோருக்கு மட்டுமே பைஸர், மொடர்னா தடுப்பூசிகள்

கொழும்பு, செப். 27
பைஸர் மற்றும் மொடர்னா தடுப்பூசிகள், உயர் கல்வி பயில்வதற்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கு மட்டுமே செலுத்தப்படும் என்று, கொரோனாத் தடுப்பு ஜனாதிபதி செயலணியின் பிரதானியான இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.



அந்த இரு வகையான தடுப்பூசிகளில் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக, தாங்கள் வெளிநாட்டுக்கு கல்வி பயில்வதற்காகச் செல்கின்றோம் என்பதற்கான கடிதத்தைக் காண்பிக்கவேண்டும்.

இந்த இரு வகையான தடுப்பூசிகளும் இராணுவத்தால் தற்போது வழங்கப்படுகின்றது. உள்ளூர் பல்கலைக்கழகங்களுக்குச் செல்லும் மாணவர்களுக்கு பைஸர் மற்றும் மொடர்னா ஆகிய தடுப்பூசிகளை வழங்குவது தொடர்பில் இதுவரையிலும் எவ்விதமான தீர்மானங்களும் எட்டப்படவில்லை என்றும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார். (த-இ)





மாடு கடத்தலில் ஈடுபட்ட

## பொலிஸ் அலுவலர் உட்பட மூன்று பேர் அதிரடிக்கைது!

யாழ்ப்பாணம், செப். 27
அனுமதிப் பத்திரம் இன்றி யாழ்ப்பாணத்தில் இருந்து தென்னிலங்கை நோக்கி மாடுகளை ஏற்றிச் சென்ற வாகனம் சங்குப்பிட்டிப் பாலத்துக்கு அருகில் இராணுவத்தினரிடம் சிக்கியது. அவற்றைக் கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் பொலிஸ் அலுவலர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே மேற்படி கடத்தல் முறியடிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. (ம-20)

## பரப்புக்கடந்தானில் மீள பிள்ளையார் பிரதிஷ்டை



மன்னார், செப்.27
மன்னார், பரப்புக்கடந்தான் வீதியில் இருந்த பிள்ளையார் சிலை இனந்தெரியாதவர்களால் அகற்றப்பட்டு அந்தோனியார் சிலை வைக்கப்பட்ட நிலையில், மீண்டும் அந்த இடத்தில் பிள்ளையார் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. பரப்புக்கடந்தான் வீதியில், மடு தேவாலயத்தில் இருந்து 4 கிலோமீற்றர் தூரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த பிள்ளையார் சிலை இனந் தெரியாதவர்களால் அகற்றப்பட்டு அந்த இடத்தில் இரவோடு இரவாகப் அந்தோனியார் சிலை வைக்கப்பட்டிருந்தது.

இது மக்கள் மத்தியில் பலத்த விசனத்தை ஏற்படுத்தியிருந்த நிலையில், மன்னார் மாவட்டச் செயலர் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்ததுடன், அந்தோனியார் சிலை அங்கிருந்து பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. இந்தநிலையில் பெரியபண்டிவிரிச்சானைச் சேர்ந்த சைவ சமய ஆர்வலர்களால் நேற்றுமுந்தினம் அந்த இடத்தில் பிள்ளையார் சிலை மீண்டும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவடைக்குத் தயாரானபோது

# பிடுங்கி எறியப்பட்டன மிளகாய்ச் செடிகள்

## விசமிகள் அட்டகாசம்



கிளிநொச்சி, செப். 27

**கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவிலுள்ள அரசர்கேணி பகுதியில், சிறப்புத் தேவையுடைய குடும்பம் ஒன்று மேற்கொண்டுவந்த மிளகாய்ப் பயிர்ச்செய்கையில், விசமிகள் சிலர் செடிகளைப் பிடுங்கி எறிந்து வருமான இழப்பையும், நட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளனர்.**

இந்தச்சம்பவம், நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

விவசாயத்தை வாழ்வாதாரத் தொழிலாக மேற்கொண்டு வரும் குறித்த குடும்பம் இந்தமுறை, 800 மிளகாய்ச் செடிகளைப் பயிரிட்டுள்ளது.

விவசாய உள்ளீடுகள் பற்றாக்குறை, விலைவாசிகளின் ஏற்றம் என பல நெருக்கடிகளுக்கு மத்தியில் கடன்பெற்றும் தங்களது விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளனர்.

இந்த நிலையில், இன்று திங்கட்கிழமை அறுவடைசெய்யத் தயாரான நிலையில், நேற்றுமுன்தினம் இரவு விசமிகள் செடிகளைப் பிடுங்கி எறிந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தங்களுக்கு தொடர்ச்சியாக இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆனாலும், எவருமே இதுவரை கைது செய்யப்படவில்லை, இந்த விடயங்கள் கண்டுகொள்ளப்படுவதில்லை என்று அவர்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பில் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (த-214)

## தவறான முடிவெடுத்த இளைஞன் துயரச்சாவு

கொடிகாமம், செப். 27

தவறான முடிவெடுத்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

கைதடிப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-159)

## மரக்கடத்தல் இருவர் கைது

யாழ்ப்பாணம், செப். 27

அனுமதிப்பத்திரம் இல்லாமல் மரங்களைக் கடத்திச் சென்ற இருவர் யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்வியங்காடு பகுதியில் இருந்து கோண்டாவில் பகுதிக்கு வேப்பமரக் குற்றிகளை ஏற்றிச்சென்றபோதே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கோப்பாய் புலனாய்வுப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். (ம-25)




வீதிகளில் மீன்வலை

## விபத்துகளால் பலர் பாதிப்பு

மன்னார், செப். 27

வீதியில் உலரவிடப்பட்ட மீன் வலையில் சிக்கி, நான்குமாதங்களான கர்ப்பிணிப் பெண்ணும் குழந்தையும் காயமடைந்தனர்.

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனங்கட்டுக்கொட்டு, ஜீவபுரம், ஜிம்ரோன் நகர், சாந்திபுரம் போன்ற கிராமங்களில் ஒரு சில மீனவர்கள் மீன்பிடி வலைகளைப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றாது வீதிகளில் உலர விடுகின்றமையால் தொடர்ச்சியாக விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன.

இந்தநிலையில், நேற்றுமுன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் பயணித்த தம்பதியினர், வீதியில் உலரவிட்டிருந்த வலையில் சிக்கி விபத்துக்குள்ளாகி, படுகாயமடைந்து, மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதனையடுத்து மீன்பிடி வலைகளை வீதியில் உலர விடுவோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு முறைப்பாடும் பதிவுசெய்யப்பட்டதால், நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-56)

## கோத்தாவின் உரை சுயநலத்தின் உரை

செல்வம் எம்.பி தெரிவிப்பு

மன்னார், செப். 27

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஐக்கிய நாடுகள் சபையில் ஆற்றிய உரை, பெறுமதிமிக்க எங்களது உயிர்களை துச்சமாக மதித்துள்ள சுயநல உரை என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் அமைந்துள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையைப் பெற்றுகொள்ளவதற்கான யுக்தியாகவே கோத்தாபயவின் ஐ.நா உரையைப் பார்க்கின்றேன். இலங்கையில் வாழும் அனைத்து இனமும் சமம் என்று அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியாக பொறுப்பேற்றதில் இருந்து அடிக்கடி ஒரு விடயத்தை அவர் குறிப்பிட்டு வருகின்றார்.

தான் சிங்கள மக்களின் வாக்குகளாலேயே வெற்றிபெற்றேன் -என்றார்.

அத்துடன் தமிழர் பிரதேசங்களில் முன்னெடுக்கப்படும் அடக்குமுறைகள் இராணுவப் பிரசன்னம், உயிரிழந்தவர்களை நினைவுகூரக்கூட முடியாத இக்கட்டான நிலையில் தமிழர்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

எனவே இனங்கள் அனைத்தும் சமன் என்று தெரிவிப்பதை ஏற்க முடியாது. அது உண்மைக்கு புறம்பானது.

காணாமல் போனவர்களுக்கு இறப்புப் பத்திரம் வழங்கமுடியும் எனத் தெரிவித்ததன் மூலம் அவர் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் என்ற வகையில் ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை வழங்கியுள்ளார்.

காணாமல் போனவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்பதை அவர் ஏற்றுள்ளார். அப்படியானால் படுகொலை செய்தவர்களுக்கு என்ன தீர்ப்பு?. அவர்களுக்கான நீதி என்ன?. கொலை செய்தவர்களை தண்டித்த பின்னரே பத்திரம் வழங்க முடியும்.

அவர் இராணுவத்தை காப்பாற்றும் நிலைப்பாட்டினையே கொண்டுள்ளார்.

எனவே அந்தக்கூற்று எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாக உள்ளது. இன்று விடுதலைப் புலிகள் தொடர்பான ஒளிப்படங்களை வைத்திருந்தால்கூட கைதுசெய்வதற்கான நிலைமை பயங்கரவாத தடைச் சட்டத்தினூடாக உருவாக்கப்பட்டுள்ளது. அது மோசமாக எமது இளைஞர்களை வஞ்சித்துக் கொண்டிருக்கின்றது. எனவே அவரது உரையை எந்தவிதத்திலும் என்னால் ஏற்றுக்கொள்ளமுடியாது -என்றார். (ம-110)

வவுனியாவில்

## இடைக்கால பருவ மழை சில நாள்கள் தொடரும்

வவுனியா, செப்.27

வவுனியாவில் இடைக்கால பருவமழை சில நாள்களுக்குத் தொடரும் என்று மாவட்ட வளிமண்டல நிலையப் பொறுப்பதிகாரி தா.சதானந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் கடந்த சில நாள்களாக காற்றுடன் கூடிய கடும் மழை பெய்து வருகின்றது.

கடந்த ஜனவரி முதல் நேற்று முன்தினம் அதிகாலை 8 மணியுடன் நிறைவடைந்த காலப்பகுதியில் 806.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இந்த மாதம் 18 ஆம் திகதியிலிருந்து நேற்று முன்தினம் காலை 8 மணியுடன் நிறைவடைந்த காலப்பகுதியில் மட்டும் 117.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. அதனால் இடைக்கால பருவ மழை இன்னும் சில நாள்கள் நீடிக்க வாய்ப்புள்ளது.

எனவே இடி மின்னல் அதிகரிக்கும் நிலைமைகளும் காணப்படுகின்றன. பொதுமக்கள் பாதுகாப்புடனும், அவதானத்துடனும் செயற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4-110)

## விபத்தில் மூவர் காயம்

இரு வாகனங்கள் கட்டுப்பாட்டை இழந்து ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின. அதில் மூவர் காயமடைந்தனர்.

இந்த விபத்து வவுனியா ரயில் நிலைய வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

விபத்தில் மூவர் காயமடைந்த நிலையில், வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியா நகரில் இருந்து ரயில் நிலைய வீதி ஊடாகச் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்றும், துவிச்சக்கர வண்டி ஒன்றும் கட்டுப்பாட்டை இழந்து ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின.

விபத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவரும், துவிச்சக்கர வண்டியில் பயணித்த முதியவர் ஒருவரும் காயமடைந்தனர். (ஒ-4-18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில்மோட்டை செய்தி வெளியிட்ட

# ஊடகவியலாளருடைய வீட்டின் மீது தாக்குதல்

**மன்னார், செப். 27**

**மடு கோவில்மோட்டை காணி விவகாரம் தொடர்பில் செய்தி வெளியிட்ட ஊடகவியலாளரின் வீடு மீது இனந்தெரியாத நபர்கள் நேற்றுமுன்தினம் இரவு தாக்குதல் நடத்தியுள்ளனர். இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.**



மடு பிரதேச செயலர் பிரிவில் உள்ள கோவில்மோட்டை காணி தொடர்பான பிரச்சினை நீண்ட காலமாக இருக்கின்றது. இந்த நிலையில் விவசாயக் காணிகளை உழவுசெய்ய முற்பட்ட சமயம் கோவில்மோட்டை விவசாயிகளுக்கும், அருட்தந்தை உள்ளடங்கலான குழுவின ருக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் செய்தி வெளியிட்ட ஊடகவியலாளரின் வீடுமீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அத்துடன் அருட்தந்தையொருவர் தொலைபேசியிலும் குறித்த ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார். இது தொடர்பிலும் முறைப்பாடு பதிவு நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-56)

# தியாகதீபம் திலீபனுக்கு நினைவேந்திய சிவாஜி

வாசலில் பொலிஸ், படைகள்

யாழ்ப்பாணம், செப். 27

தியாகதீபம் திலீபனின் 34ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வை, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் நேற்றுக் கடைப்பிடித்தார்.

தியாகதீபம் திலீபனின் உயிர்பிரிந்த நேரமான முற்பகல் 10.48 க்கு, வல்வெட்டித்துறையிலுள்ள தனது அலுவலகத்தில் சுடரேற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்.

அதேவேளை, அவரது அலுவலகத்துக்கு முன்பாக பெருமளவான பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள், இராணுவத்தினர் சூழ்ந்திருந்தனர்.

இதன்போது, 'இந்திய -இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து ஒரு சொட்டுத் தண்ணீர்கூட அருந்தாமல் 12 நாள்கள் உண்ணாவிரதமிருந்து தன் உயிரை ஈகம்செய்த மாவீரன் திலீபனுக்கு வீர வணக்கம், இதயபூர்வமான அஞ்சலி.

இலங்கை அரசால் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைக்காக, இலங்கை அரசை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தல், இனப்படுகொலை மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்தல், தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட சர்வதேசக் குற்றங்களுக்காக ஈடுசெய் நீதி கிடைப்பதை உறுதிசெய்தல், ஈடு செய் நீதி மூலம் இலங்கையில் வடக்குக் கிழக்கு பிராந்தியத்தில் தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாசைகளைத் தெரிந்துகொள்ளக்கூடிய விதத்தில் பொதுசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துதல் ஆகிய ஐந்து கோரிக்கைகளையும் நிறைவேற்றுமாறு 'குவாட்' அமைப்பிடம் (அமெரிக்கா,இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா உட்பட்ட நாடுகள்) கேட்டுக்கொள்கின்றோம். தமிழரின் தாகம்! தமிழீழத் தாயகம்.!' என்று குறிப்பிடப்பட்ட பதாகை காட்சிப்படுத்தப் பட்டிருந்தது. (த-26)

# முல்லைத்தீவிலும் திலீபனுக்கு அஞ்சலி

முல்லைத்தீவு, செப். 27

தியாகதீபம் திலீபனுக்கு முல்லைத்தீவில் பிரத்தியேக இடத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரமுகர் அ.ஜே. பீற்றர் இளஞ்செழியன் மலர் தூவி, பொதுச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினார்.

இலங்கையில் இந்திய இராணுவ தலையீட்டின்போது, 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 1987 செப்ரெம்பர் 15ஆம் திகதி நீராகாரமும் அருந்தாமல் உண்ணாவிரதம் இருந்த தியாகி திலீபன், செப்ரெம்பர் 26ஆம் திகதி உயிர்நீத்தார்.

இளஞ்செழியனுக்கு, அவரது தந்தையாரின் பெயரில் முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளையை வழங்கவந்த பொலிஸாரிடம், "இறந்த என் தந்தைக்கு உண்ணாபிலவில் அமைந்துள்ள கத்தோலிக்க சேமக்காலையில் சென்று வழங்குங்கள். அவர் உயிர்பெற்று வரும்போது உங்களை சில வேளை தொடர்பு கொள்ளுவார்" என்றுகூறி முல்லைத்தீவு தலைமைப் பொலிஸ் அதிகாரிகளைத் திருப்பி அனுப்பியமை குறிப்பிடத்தக்கது.

பீற்றர் இளஞ்செழியனின் வீட்டைச்சுற்றி புலனாய்வாளர்கள், இராணுவத்தினர், பொலிஸார் கண்காணித்து வருகின்றனர். பீற்றர் இளஞ்செழியன் செல்லும் இடமெல்லாம் புலனாய்வாளர்கள் பின்தொடர்கின்றனர் என்றும் தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன. (த-19)



# தியாக தீபத்துக்கு தவிசாளர் அஞ்சலி

யாழ்ப்பாணம், செப். 27

தியாகதீபம் திலீபனின் 34 ஆவது நினைவேந்தலை வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் நேற்றுக் கடைப்பிடித்தார். தனது வீட்டில், குடும்பத்தினருடன் சுகாதார நடைமுறைகளுக்கு அமைய ஈகைச்சுடரேற்றி அஞ்சலி செய்தார். (த)



# தியாகதீபம் திலீபனுக்கு கிளிநொச்சியில் அஞ்சலி



கிளிநொச்சி, செப். 27

தியாக தீபம் திலீபனின், 34 ஆம் ஆண்டு நினைவேந்தலின் இறுதி நாளான நேற்று, அவர் வீரச்சாவடைந்த நேரமான 10.48 மணிக்கு கிளிநொச்சியில் ஒழுங்கமைக்கப்பட்ட ஓர் இடத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஈகைச்சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்.

தாயகம் எங்கும் திலீபனின் நினைவேந்தலை தடுக்கும் நோக்கில் இராணுவம் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். தியாகி திலீபன் 1987 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் நீராகாரம் ஏதுமின்றிய அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டு செப்ரெம்பர் 26 ஆம் திகதி வீரச்சாவைத் தழுவியிருந்தார்.

மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும். அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும். ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும். தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும். ஆகிய ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து திலீபன் உண்ணாநோன்பு இருந்து தன்னுயிரை ஈகம் செய்தார். (த-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள்




2020 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரணத் தரப்பரீட்சை முடிவுகள் கடந்த வாரம் வெளியாகின. எமக்குக் கிடைக்கப்பெற்ற பாடசாலை ரீதியான சிறப்பான பெறுபேறுகள் வருமாறு

### யா/கைதடி குருசாமி வித்தியாலயம்

பி.ஜினோஜனன்2ஏபி4சிஎஸ், த.வேணுகா ஏபி 3சி3எஸ்,இ.ஜனனிபி4சி2எஸ்,செ.கௌதமன் பி.2சி 3எஸ், யோ.விதுனா5சி2எஸ்,சி.கவிசனா3சி3எஸ்.

### யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம. வி.

ஸ்ரீ.கிருத்திகா3ஏ4பி2சி,த.ஜீவினா3ஏ3பி3சி,க.சாதனா2ஏபி3சி3எஸ், ஜெ.கிசாலினி3பி4சி,ம.மிதுசிகா2பி2சி4எஸ்,க.பிறின்சிகா7சி2எஸ்,இ.திலக்ஷன்6சி2எஸ், ஜெ.லிதுஜா5சி3எஸ்,பி.ஷாகிறாம் 4சி,3எஸ், ஜெ.கிஷானா3சி3எஸ்,பு.பிரியங்கா 2சி6எஸ்,பி.பதுர்சிகா2சி5எஸ்,த.அபிஷாபிசி4எஸ்.

### யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி

சி.ரிசீபா4ஏ4பிசி,ம.டிலோஜினி3ஏ3பி2சி, ம.நித்திகா2ஏ4பி2சி,செ.கோகுல்ராஜ்3ஏ3சி2எஸ்,த.நிவேந்தி ரன் 3ஏபிசிஎஸ்,ம.சிலம்பரசன்2ஏ5சி.

### யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்

ஜெ.றொ.அன்சன்9ஏ, சி.சானுஜா 8ஏ,ஜெ.கோபிகா 7ஏ2பி, சு.டினுசன் 6ஏபிசி, ம.நர்த்தனன் 5ஏ2பிசி, தி.ஆர்த்திகா4ஏ2பி2சி, மு.யதுர்சன்4ஏ2பிசிஎஸ், யோ.தனுஜன் 4ஏபிசி2எஸ், யோ.கஸ்தூரிகா3ஏ3பிசி2எஸ், லோ.லோகினி 3ஏ2பிசி2எஸ், வி.குபனி 2ஏ3பி2சிஎஸ், சி.லதுர்ஷன் 2ஏ4சி2எஸ், வ.பிரசன்னா ஏபி 6சி,அ.வனோஜிதா ஏ3பி3சிஎஸ்,யோ.திலக்சன்3பி3சிஎஸ், த.பபிணயா 2பி3சி3எஸ், ஜெ.டிலக்சன் பி3சி3எஸ், ச.ஜனனி பி3சி 2எஸ்,ர.சிவாஜினி 4சி2எஸ், ய.மாதவன் 3சி4எஸ்,கு.கவியன்பன்3சி5எஸ்.

### யா/வரணி மத்திய கல்லூரி

எஸ்.வாசிகா9ஏ,ஜெ.அதிசயா8ஏ,வி.ஜிந்துசா8ஏ, ஆர்.கோபிரம்மியா7ஏபி,எஸ்.வினுசன்8ஏபி, ஆர். தசஜியந்தன்7ஏபிசி,எஸ்.மிதுசன்7ஏபிசி,எஸ்.பனுசன் 6ஏபிசி,ரி.கார்த்திகன் 5ஏ3சி,ஆர்.துளசிதரன் 5ஏ2பி2சி,யு.தரணிகா5ஏ3பி,வி.கம்சிகா4ஏ4பி,ஆர்.யமினா4ஏ4பி,எ.டிலனியா4ஏ3பி2சி,கே.ஆஸா 4ஏ2பி2சி,ரி.அக்ஸனா3ஏ4பிசிஎஸ்,வி.வின்சா 3ஏ4சிஎஸ்.

### யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

அ.லக்சிகா 9ஏ, யோ.யக்ஷயன் 8ஏ, ப.சாருஷா 8ஏ, சொரூபி 8ஏ, தி.பிரணவன் 8ஏபி, ம.இந்துஜா 8ஏபி, சூ.சாரங்கன் 8ஏபி, பி.முகுந்தினி 8ஏபி, க.அபிநயன் 7ஏ2பி, ஜெ.கீர்த்தனா 7ஏ2பி, ம.நிதர்சனா 7ஏபி, ரெ.விதுசன் 5ஏ4பி, சி.அபிராமி 5ஏ 3பி, ஜெ.நாகசுமி5ஏ3பி, நா.கிந்துஷா5ஏ2சிஎஸ், ர.சுரபி 4ஏ4சிஎஸ்

### யா/புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்

சு. வேணுயா 9 ஏ, அ. மீனுயா 9 ஏ

### யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை

க.பாருக்தியா 7ஏபி, ஜ.லக்சன்3ஏ4பிசிஎஸ்,க.சுகிர்தா ஏ3பி2சி 2எஸ்,சு.பிரவீன்3பி5சிஎஸ்,த.கவின்பி4சி4எஸ்,இ.துஜீபன்3சி4எஸ்.

### யா/சென். பற்றிக்ஸ் கல்லூரி

எல். அபிஸ்க்ளின் 9ஏ, ஆர். டெனிஷன் 9ஏ, ஜே. டபிள்யூ.ஜாக்சன் 9ஏ, வி.ஜீவிதன் 8ஏ, கே.கபில்ராஜ் 8ஏ, எம்.ஸ்ரலன்ராஜ் 8ஏ, ஏ.பி.ஜொனதன் 8ஏபி, ஏ.ஆர்.றேனுஷன் 8ஏசி, ஏ.வி.அபிலாஷ் 7ஏ2பி, பி.பெனிலோ 7ஏபிசி, என்.அட்ஷயன் 6ஏ2பி, ஜே.கஸ்ரோன் 6ஏ2பி, எஸ்.டெல்வின் 6ஏ2பி, ஜே.யதுஷன் 6ஏ3பி, எம்.எம்.அன்ரன்குரூஸ்வோன் 6ஏ2பிசி, எஸ்சமிந்தன் 6ஏபி2சி, ஜே.ஜே.டினோஷன் 5ஏ3பி,ஜே.ரி.நிறோஜன் 5ஏ2பிசி, ஜே.ஜே.டில்ஷான் 5ஏ2பிசி, ஜே.ஜே.ஜெனட் ஜெகிஷன் 5ஏ2பி2சி, எஸ்.டனிஸ்ரன் 5ஏ3பிஎஸ், ஜே.றொனால்ட் 4ஏபி2சிஎஸ், ஆர்.ஆர்.சி.ஷெரோன் 4ஏ3பிசி, இ.ஆகாஷ் 4ஏ5பி, ஏ.ஆர்.அகிஷயன் 4ஏ3பி2சி, ஆர்.கெனிஸ்ரன் 4ஏ2பி3சி, பி.அபிலாஷ் 4ஏ2பி2சிஎஸ், ஏ.சஞ்சித் 4ஏபி4சி



## குழந்தைகளுக்கு பால்மா வழங்கல்

யாழ்ப்பாணம்,செப்.27

உரும்பிராய் லயன்ஸ் கழகம் மற்றும் இருபாலை கோல்டன் ஸ்ரார் லயன்ஸ் கழகம் ஆகியன இணைந்து இருபாலை தெற்கு பிரதேசத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு பால்மா பைக்கற்றுக்களை வழங்கின.

பன்னாட்டு லயன்ஸ் கழகங்களின் 306 பி1 மாவட்ட பிரதிச் செயலாளர் லயன் ம. மயூரதனின் தலைமையில் பால்மா பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டன. (4,159)

## பாடசாலை வரலாற்றில் ஆஞ்சலோ சாதனை



கொழும்பு,செப்.27

தற்போது வெளியாகியுள்ள சாதாரண தரப் பரீட்சையில் மன்னார் பெரிய பண்டிவிரிச்சான் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் மைக்கல் ஆஞ்சலோ, பாடசாலை வரலாற்றில் முதல் முறையாக 8 ஏ சித்தியைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

மைக்கல் ஆஞ்சலோ எட்டுப் பாடங்களில் அதிசிறப்பு சித்தியும் (ஏ), ஒரு பாடத்தில் திறமைச் சித்தியும் (சி) பெற்று பெரியபண்டிவிரிச்சான் கிராமத்துக்கும், பெரியபண்டிவிரிச்சான் மகா வித்தியாலயத்துக்கும் பெருமை தேடிக் கொடுத்துள்ளார்.

குறித்த மாணவன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 173 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்திருந்தார்.

அதேவேளை பெரியபண்டிவிரிச்சான் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி ஆன்இமயா 7ஏ,பிஎஸ், ஜெ.ஜெரோஷா லெம்பேட் 6ஏ,2சி என்ற பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். (4,213)

## பெற்றோரை இழந்த மாணவன் சாதனை!



முல்லைத்தீவு,செப்.27

பெற்றோரை இழந்த மாணவன் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில், க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

தலவாக்கலை நுவரெலியாவைச் சேர்ந்த யூட் நிலக்சன் என்ற மாணவன் சிறுவயதிலேயே பெற்றோரை இழந்த நிலையில் தனது உறவினர்களின் அரவணைப்பில் வாழ்ந்து வருகின்றார்.

2019 ஆம் ஆண்டு கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் அமைந்துள்ள ஆரோபணம் சிறுவர் விடுதியில் கல்வியைத் தொடர்ந்த மாணவன், முல்லைத்தீவில் அருட்தந்தை றொபின்சன் அடிகளாரின் வழிநடத்தலில், புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலய மாணவர் விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்று வருகின்றார்.

ஆசிரியர்களின் வழிகாட்டலுடன் எந்தவித தொழில்நுட்ப தொலைத்தொடர்பு சாதனங்களும் அற்ற நிலையில், நிகழ்நிலைக் கல்வியையும் தொடராது 4ஏ2பி2சி என்ற சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ளார். (4,19)



## இரு மாணவர்களுக்கு ரூ.20,000 அன்பளிப்பு

சாவகச்சேரி,செப்.27

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில், க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் அதி சிறப்புச்சித்தி பெற்ற இரண்டு மாணவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா அன்பளிப்பு வழங்கப்பட்டது.

வித்தியாலயத்தின் பழைய மாணவரும், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரியுமான மருத்துவர் சி.சுதோகுமார் மாணவர்களைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்ததுடன், அன்பளிப்பையும் வழங்கினார்.

வித்தியாலய அதிபர் க.சண்முகதாஸ் முன்னிலையில், வித்தியாலய மண்டபத்தில் வைத்து அன்பளிப்பு வழங்கப்பட்டது. (4,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானசார தேரருக்கு எதிராக முஸ்லிம் எம்.பிக்கள் முறைப்பாடு

கொழும்பு, செப். 27

பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறுகோரி முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொலிஸ் தலைமையகம் மற்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் ஆகியோரிடம் முறைப்பாடு பதிவுசெய்துள்ளனர்.

முஸ்லிம்கள் மீது அவதூறு பரப்பும் விதமாகவும் இறைவனை நிந்திக்கும் விதமாகவும் ஞானசார தேரர், சிங்கள தனியார் ஊடகமொன்றின் அரசியல் விவாத நிகழ்ச்சியில் கருத்துத் தெரிவித்தமை தொடர்பில் விசாரிக்குமாறே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், பைசல் காசிம், அல்ஹாபிழ் இசட். நஸீர் அஹமட், எம்.எஸ். தௌபீக், அலிசப்ரி ரஹீம், சட்டத்தரணி முஸாரப் முது நபின், இசாக் ரஹ்மான் ஆகியோரே முறைப்பாடு செய்துள்ளனர்.

"கடந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் நடத்திய குழு மற்றும் அவர்களை அந்த நடவடிக்கையில் ஈடுபடத் தூண்டிய விடயங்கள் சில குர்ஆனின் போதனைகளாக இருக்கின்றன என்றும், அவர்கள் வணங்கும் இறைவனான அல்லாஹ்தான் இதற்கு முழுக்காரணம் என்றும் இறைவனை நிந்திக்கும் விடயம் பாரதூரமானது.

இதனால் முஸ்லிம்கள் கொதிப்படைந்துள்ளனர்.

எனவே, இந்த விடயத்தைச்செய்த ஞானசார தேரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நோக்கில் குறிப்பாக மக்களைக் குழப்பி மத நிந்தனை செய்துள்ள இந்த குற்றச் செயலுக்கு ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தின் கீழ் ஞானசாரரைக் கைதுசெய்து தண்டிக்க வேண்டும் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், மிக நிதானமாகவும் சமூகப் பொறுப்புடனும் இவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க பொலிஸாரை அணுகியுள்ளோம்.

இதுபற்றி மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவுடனும் பேசியுள்ளோம். நாடு திரும்பியவுடன் ஜனாதிபதியைச் சந்தித்து நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்துவதற்கும் தீர்மானித்துள்ளோம். - என்றார். (த-22)



## ரூ.100 லட்சம் நன்கொடை

கொழும்பு, செப்.27

செய்கடமை கொவிட் - 19 சுகாதார மற்றும் சமூகப் பாதுகாப்பு அறக்கட்டளைக்கு, லங்கா ஹொஸ்பிடல்ஸ் நிறுவனத்தால், 100 லட்சம் ரூபா நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி தீப்தி லொக்கு ஆராச்சி, ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கே.பீ. எகொடவெலவிடம் காசோலையைக் கையளித்தார்.

இந்த அறக்கட்டளைக்கு காசோலை அல்லது டெலிகிராஃப் தந்திப் பரிமாற்றத்தின் ஊடாகவும் www.itukama.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகவோ அல்லது #207# என்ற குறியீட்டை அழுத்தியோ நன்கொடை வழங்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

## சந்திம எம்.பிக்கு கொரோனா

பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி, கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார். நோய் அறிகுறிகள் தென்பட்டதை அடுத்து, நேற்றுமுன்தினம் இரவு கராப்பிட்டிய போதனா மருத்துவமனைக்குச் சென்று அன்டிஜென் பரிசோதனையை மேற்கொண்டார். அதன்போதே தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அதனையடுத்து ஹிக்கடுவவில் உள்ள ஹொட்டலொன்றில் அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். (த-இ)

வெள்ளைப்பூண்டு கொள்கலன் விவகாரம்

## சட்டவிரோத விடுவிப்புக்கு உதவிய அதிகாரியொருவர் விளக்கமறியலில்



கொழும்பு, செப். 27

லங்கா சதொசாவுக்கு சொந்தமான 54 ஆயிரம் கிலோகிராம் வெள்ளைப் பூண்டு அடங்கிய இரண்டு கொள்கலன்களை கொழும்பு துறைமுகத்திலிருந்து சட்டவிரோதமாக விடுவித்த குற்றச்சாட்டில் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டார்.

குற்றவியல் நம்பிக்கை மீறல், தகவலை மறைத்தல் மற்றும் துறைமுகத்திலிருந்து சட்டவிரோதமாக பொருள்களை விடுவித்த குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

## கிராமங்களை முன்னேற்றுவோம் பாதீட்டுக்கு ஆதரவு தாருங்கள்

கோருகின்றார் அமைச்சர் கெஹலிய



கொழும்பு, செப். 27

"2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டமானது கிராமப்பகுதிகளையும் மேம்படுத்துவதாகவே அமையும். எனவே, அரசின் பயணம் வெற்றியளிக்க ஆதரவு தாருங்கள்" என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொத்மலை பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரசியல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கோரினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் எதிரணியில் இருக்கும்போது, மக்களே எமக்கு நம்பிக்கையளித்தனர். எம்முடன் பயணித்தனர். அதனால்தான் குறுகிய காலத்துக்குள் கட்சியை உருவாக்கி ஆட்சியைப் பிடித்தோம்.

மக்களின் எதிர்ப்பார்ப்புகளை நிறைவேற்றுவதில் தீவிரம் காட்டி வருகின்றோம். இவ்வாறானதொரு நிலைமையில்தான் கொரோனா நெருக்கடி ஏற்பட்டது. இதனால் பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்டது. இருந்தாலும் மக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தி அவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

உலகில் மொத்த சனத்தொகையில் 50 வீதமானோருக்கு இரண்டு தடுப்பூசிகளையும் வழங்கிய நாடுகளின் பட்டியலில் இலங்கை 5 ஆவது இடத்துக்கு வந்துள்ளது.

நிதி நெருக்கடி இருந்தால்கூட சுகாதார அமைச்சால் அமைச்சரவையில் முன்வைக்கப்படும் பத்திரங்கள் நிராகரிக்கப்படுவதில்லை. மக்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதால்தான் இவ்வாறு நடைபெறுகின்றது. நாடு தற்போது வழமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றது. தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைகின்றது. மருத்துவமனைகளில் இடம் உள்ளது.

-என்றார். (த-இ)

## யாசகர்கள் மீது கடும் தாக்குதல்

கொழும்பு, செப்.27

தூங்கிக் கொண்டிருந்த யாசகர்களை தடியால் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் கெஸ்பேவா மாநகர சபையின் பரிசோதகர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பிலியந்தலை பொதுச் சந்தையில் நடந்துள்ளது.

காயமடைந்த இரண்டு யாசகர்களும் களுபோவில போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தூங்கிக்கொண்டிருந்தவர்களை கொரோனா பரப்புகிறீர்கள் என்று கூறி பரிசோதகர் தாக்குதல் நடத்தினார் என்று யாசகர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர். அதனையடுத்து கெஸ்பேவா மாநகர சபையின் பரிசோதகர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ-4)

இரு மாதங்களில் மட்டும்

## புதிய கடவுச்சீட்டுகளை பெற்றுள்ள 56,406 பேர்




கொழும்பு, செப். 27

கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 56 ஆயிரத்து 406 பேர் புதிய கடவுச்சீட்டுகளைப் பெற்றுள்ளனர் என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜூலை மாதத்தில் மாத்திரம் 27 ஆயிரத்து 326 பேர் கடவுச்சீட்டு பெற்றுள்ளனர். அந்த மாதத்தில், 26 இராஜதந்திர கடவுச்சீட்டுகள் மற்றும் [illegible] அதிகார பூர்வ கடவுச்சீட்டுகளும் வெளியிடப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## மீண்டும் படுகுழிக்குள்..!

மத்திய வங்கி ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால் நியமிக்கப்பட்டதால், நாட்டின் பொருளாதாரம் நிமிர்ந்ததோ இல்லையோ, நாணயத்தாள்கள் மட்டும் மில்லியன் கணக்கில் அச்சிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நாடெங்கும் பணத்தாள்களைப் பரவவிட்டால், நாட்டு மக்களுக்குள்ள சகல பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என அரசாங்கம் நினைக்கின்றது போலும். பெருந்தொற்றுக் காலமொன்றில், இப்படி நாணயத்தாள்கள் பெருவாரியாக அச்சிடப்படுவதென்பது திரவப் பணப்புழக்கத்தை சடுதியாக அதிகரிக்கச் செய்யும். அதன் அடுத்த கட்டமாக மக்களிடமும் பணம் புழங்கும் வீதம் அதிகரிக்கும். அதனால் உடனடியாக எல்லாமே நல்லதாக நடப்பதாகவே உணரச் செய்யும். ஆனால் இப்படி கண்மூடித்தனமாக நாணயத்தாள்களை அச்சிடுவது இலங்கையின் பொருளாதாரம் இன்னும் அதலபாதளத்துக்குள் வீழ்வதையே உறுதிப்படுத்தும்.

ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் குறுக்குவெட்டுமுகமாகக் கொள்ளப்படுவது அந்த நாட்டின் நாணயப் பெறுமதியே. அதனால் எந்தளவுக்கு ஒரு நாணயம் மிகச் சிக்கனமான சுற்றோட்டத்தில் உள்ளதோ அந்தளவுக்கு அதன் பெறுமதியும் அதிகரிக்கும் என்பது சிறுபிள்ளைக்கும் தெரிந்த ஒரு பொருளாதார வெளிப்படை உண்மை. ஏற்கனவே ஒரு அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி 200 ஆக சரிந்திருக்கும் நிலையில், நாணயத்தாள்களின் எண்ணிக்கை அதிகரிப்பு இன்னும் அதனை மதிப்பிறக்கம் செய்வதாகவே இருக்கும். அதனால் மிக விரைவாகவே இலங்கை ரூபாவின் பெறுமதி இன்னும் மோசமாகச் சரிவடையும். இதன் மறுதாக்கமாக டொலரின் பெறுமதி உயர்வடைய, கொள்வனவு செய்யப்படும் பொருள்களின் விலையும் அதிகரிக்கும். உதாரணமாக தற்போது 100 ரூபாவுக்கு கொள்வனவு செய்யும் பொருளை, சில வாரங்களில் 110 ரூபாவுக்கு கொள்வனவு செய்யவேண்டியிருக்கும். உண்மையில் இதன் அர்த்தம் அந்தப் பொருளின் விலை கூடிவிட்டது என்பதல்ல. மாறாக இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ந்துவிட்டது என்பதே அதன் யதார்த்தம். ஏனெனில் முன்னர் அந்தப் பொருளை எத்தனை டொலருக்கு வாங்கினோமோ இப்போதும் அதே டொலருக்கே வாங்கக் கூடியதாக இருக்கும் போது, ரூபாவை மட்டும் அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கும்.

எல்லாப் பொருள்களுக்கும் இப்படி அதிக ரூபாவை செலவிடுவதன் விளைவுகள் நேரடியாக மீண்டும் மக்களையே தாக்கும். விலைவாசி மீண்டும் வேதாளம் போல சரசரவென முருங்கை மர உச்சிக்கு ஏறும். பதுக்கல்கள் தொடங்கும். அத்தியாவசியப் பொருள்கள் காணாமல் போகும். பட்டினி வாழ்வு பெருகும். கையில் இருக்கும் காசுக்கு முன்னர் வாங்கிய பொருள்களின் அரைவாசியைக் கூட வாங்கமுடியாத கையறுநிலை உண்டாகும். உலகின் மிகமோசமான வறுமையான, பொருளாதாரச் சரிவைச்சந்தித்த நாடாக இலங்கையும் இணைந்து கொள்ளும்.

ஒருநாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு பணத்தாள்களை அச்சிடுவதுதான் சரியான தீர்வென்றால், இப்போது வறுமையில் உழலும் ருவாண்டா உள்ளிட்ட நாடுகள் ஆளுக்கொரு அச்சிடும் இயந்திரத்தை வைத்து நாணயத்தாள்களை மலைமலையாக அச்சிட்டு, தங்கள் நாட்டை உலகின் பணக்கார நாடாகியிருக்கலாமே. ஏன் செய்யவில்லை? ஏனெனில் உண்மையான பொருளாதார உயர்வென்பது அந்த நாட்டின் உற்பத்திப் பெருக்கம், அதன் சந்தைக்கான கேள்வி, உற்பத்திகளின் தரம், வளங்களின்பயன்பாடுபோன்றபலகாரணிகளால்தீர்மானிக்கப்படுகின்றன. இவற்றுக்கெல்லாம் அடிப்படையாக மக்களின் வாழ்க்கைத்தரமும், நலனும் காக்கப்பட வேண்டும். அதை விடுத்து வெறும் காகிதக் காசுகளை அச்சிடுவதே, சர்வரோக நிவாரணி என நினைப்பது கண்ணைத் திறந்துகொண்டு படுகுழிக்குள் வீழ்வதைப் போன்றதே.




# திருமணம், கூட்டங்களுக்கு புதிய பல கட்டுப்பாடுகள்

## வருகிறது புதிய சுற்றறிக்கை இரவில் ஊரடங்கு தொடரும்

**கொழும்பு, செப். 27**

**திருமணங்கள் உட்பட பொது நிகழ்வுகள் மற்றும் கூட்டங்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கும் புதிய சுகாதார வழிகாட்டுதல்கள் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வரும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பான புதிய சுகாதார வழிகாட்டல் சுற்றறிக்கையை சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் அசேல குணவர்த்தன வெளியிடுவார் என்று குறிப்பிடப்பட்டது.

குறைந்த எண்ணிக்கையிலான மக்கள் பங்கேற்கும் விழாக்களை வீடுகளில் மட்டுமே நடத்த அனுமதிக்க சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது. புதிய சுகாதார வழிகாட்டுதல்களின்படி இறுதிச் சடங்குகள் மற்றும் பொதுக் கூட்டங்களுக்குக் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை, ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டு கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு எதிர்வரும் முதலாம் திகதி நாடு மீண்டும் திறக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார்.

கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு நாட்டை மீண்டும் திறக்க எதிர்பார்க்கப்பட்டாலும், இரவில் ஊரடங்கு உத்தரவை நடைமுறைப்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதன்படி, தினமும் இரவு 10 மணி முதல் மறுநாள் அதிகாலை 4 மணிவரை ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்படும். - என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-இ)

# முஸ்லிம், மலையக எம்.பிக்களை இணைத்துச் செயற்பட வேண்டும்!

## *மதத் தலைவர்களின் முயற்சிக்கு செல்வம் எம்.பி. ஆலோசனை*

மன்னார், செப். 27

தமிழர்களின் பொதுப்பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து செயற்படும் முடிவொன்று எட்டப்பட்டுள்ளது.

இதில் முஸ்லிம், மலையக நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்துச் செயற்பட வேண்டும் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் ஒற்றுமையாக செயற்படவேண்டும் என்ற விடயத்தினை கடந்த தேர்தல் மூலம் மக்கள் எமக்கு உணர்த்தியுள்ளனர். எனவே எமது தலைவர்கள் விட்டுச்சென்ற பணியினைத் தொடர்ந்து முன்னெடுப்போம் அத்துடன் தவத்திரு அகத்தியர் அடிகளாரும், திருகோணமலை மாவட்ட ஆயரும் இணைந்து வடக்கு கிழக்கில் இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒன்றிணைத்து மக்களின் பிரச்சினைகளை ஒருமித்துக் கையாள்வதற்கான முயற்சியை ஆரம்பித்துள்ளனர். இந்த முயற்சியை வரவேற்கின்றேன்.

இந்த விடயத்தில் ஓர் ஆலோசனையைச் சொல்ல விரும்புகின்றேன். வடக்கு- கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம் சகோதரர்களுடைய பிரச்சினைகளை எடுத்துரைப்பதற்காக முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களையோ அல்லது முஸ்லிம் தலைவர்களையோ இணைத்துக்கொள்ள வேண்டும். இரண்டாவது மலையகம் சம்பந்தமாக மக்கள் படுகின்ற துன்பங்களை வெளியில் கொண்டுவருகின்ற மலையக நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இந்த விடயத்தில் உள்வாங்க வேண்டும்- என்றார். (ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய...’ பாடல் புகழ்

# ஈழத்தின் இசைவாரிதி வர்ணராமேஸ்வரன் சாவு



**யாழ்ப்பாணம், செப். 27**

**ஈழத்தின் புகழ்பூத்த பாடகர் வர்ணராமேஸ்வரன், ‘கொரோனா’த்தொற்றுக் காரணமாக கனடாவில் காலமானார்.**

மாவீரர் நாளன்று, துயிலு மில்லங் களில் ஒலிக்கும் ‘தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளே...’ என்ற பாடல்உள்ளிட்ட பல்வேறு தாயகப் பாடல்களைப் பாடியவர் வர்ணராமேஸ்வரன். அவர், யாழ்ப்பாணம், அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவருடைய தந்தையார் கலாபூசணம், சங்கீதரத்தினம் முருகேசு வர்ணகுலசிங்கம் சிறந்த இசைப் பாரம்பரியத்திலே தோன்றியவர். இவரது தந்தை வழிப்பேரனாரும் தாய் வழிப்பேரனாரும் இசை நாடகக் கலைஞர்கள்.

ஆரம்பக் கல்வியை அளவெட்டி சீனன் கலட்டி ஞானோதய வித்தியாசாலையி லும், பின்னர் உயர் கல்வியை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும் கற்றார். இராமேஸ்வரன் பண்ணிசை மூலமும், பின்னர் மிருதங்கம் வாசிப்பது மற்றும் ஆர்மோனியம் வாசிப்பதன் மூலமும் தந்தையின் பயிற்சியில் கர்நாடக இசையைக் கற்றார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் இராமநாதன் நுண்கலைப் பிரிவில் மாணவனாக இணைந்து கொண்டார். அதன் வாயிலாக நான்கு ஆண்டுகள் இசைக்கலைமணி என்னும் பல்கலைக்கழகப் பட்டத்தைப் பெற்று, அங்கேயே தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக இசை விரிவுரையாளராகவும் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (து-இ)

## சௌபாக்கியா திட்டத்தின்கீழ் வீடு திருத்திக் கையளிப்பு

முல்லைத்தீவு,செப்.27

புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியில் வசித்துவரும் மூன்று பெண்பிள்ளைகளைக் கொண்ட குடும்பம் ஒன்றின் வீடு, சமுர்த்தி சௌபாக்கியா திட்டத்தின் கீழ் திருத்திகொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட வீட்டுத்திட்டம் முழுமை பெறாத நிலையில் சமுர்த்தி சௌபாக்கியா திட்டத்தின் கீழ் 2 லட்சம் ரூபா செலவில் குறித்த வீடு முழுமைப்படுத்தப்பட்டு பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

நிகழ்வில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள வாழ்வாதார பிரிவு மேலதிக பணிப்பாளர் நாயகம் சிவலிங்கம் சத்தியசீலன், மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி,புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் சி.ஜெயகாந், மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்கள கணக்காளர் திருமதி சுதர்சினி மற்றும் மாவட்டச் செயலக மூத்த முகாமையாளர் தி.யோகேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவி உள்ளிட்ட மூன்று பெண் மாணவர்களுடன் வாழ்ந்துவரும் குடும்பத்தின் நிலையைக் கருத்தில் கொண்டு இந்த உதவித்திட்டம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-19)





## விவசாயிகளுக்கான விழிப்புணர்வுச் செயற்பாடு

சாவகச்சேரி,செப்.27

‘விதை நெல்லை சுத்திகரித்து விளை திறனை அதிகரிப்போம்’ என்னும் கருப்பொருளில் சாவகச்சேரி சரசாலை வடக்கு விவசாயிக ளுக்கான விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது விதை நெல்லை சுத்திகரிப்பது மற்றும் இயற்கைப் பசளை உற்பத்தியை ஊக்குவிப்பது தொடர்பில் விவசாயிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி ஶ்ரீரங்கன் அஞ்சனாதேவி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலர் சமன் பந்துலசேன, மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.சிவபாதசுந்தரம், வடக்கு மாகாண விவசாய பணிப்பாளர் எஸ். சிவகுமார் மற்றும் விவசாய அமைச்சின் அபிவிருத்திப் பணிப்பாளர் புஷ்பகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-125)

## அந்தோனி மார்க்குக்கு வவுனியாவில் அஞ்சலி

வவுனியா,செப்.27



கொரோனாத் தொற்றால் உயிரிழந்த சிரேஷ்ட ஊடகவியலாளரும்,தமிழ்ப் பற்றாளருமான பீ.ஏ.அந்தோனி மார்க்குக்கு வவுனியாவில் நேற்று முந்தினம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

ஊடகவியலாளர்கள் அவரது திருவுருவப் படத்துக்கு ஒளிதீபம் ஏற்றி, மலரஞ்சலி செலுத்தினர். வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட அஞ்சலி நிகழ்வில், அவரது நினைவுரையை வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் சு.வரதகுமார் ஆற்றினார். (4,110)




## கணேசுவரா வித்தியாலயத்தின் பழைய மாணவர்களால் உதவி

வவுனியா,செப்.27

வவுனியா பாவற்குளம் கணேசுவரா மகா வித்தியா லயத்தின் பழைய மாணவர்களின் நிதியுதவியுடன், வவுனியா மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. வித்தியாலயத்தில் கல்விபயின்று புலம்பெயர்ந்து வாழ்பவர்களின் ஆதரவுடன், பழைய மாணவர்கள் சங்கத்தின் ஊடாக உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சுமார் ஆறு லட்சம் ரூபா பெறுமதியான கொரோனாத் தொற்றாளர்களுக்குரிய .5 விசேட கட்டில்கள் மற்றும் 150 ஒட்சிசன் மாஸ்க் ஆகியவை கையளிக்கப்பட்டன. வவவுனியா மாவட்ட பொது மருத்துவமனைப் பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினரிடம் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. (4,110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ ஆட்சிக்கு எதிராகப் போராட்டம்

## பிக்குகள் இணைந்து முன்னெடுப்பு

**நைபிட்டோ, செப். 27**

**மியான்மரில் இராணுவ ஆட்சிக்கு எதிராகப் பிக்குகள் இணைந்து போராட்டம் நடத்தியுள்ளனர். தலைநகர் நைபிட்டோ, வர்த்தக நகரான யாங்கூன் உள்ளிட்ட இடங்களில் இந்தப் போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.**



மியான்மரில் ஆங் சான் சூச்சி தலைமையிலான அதிபர் மியன்ட் ஆட்சி இராணுவத்தால் அகற்றப்பட்டு 6 மாதங்கள் நிறைவடைந்துள்ளன.
கடந்த பெப்ரவரி மாதம் சூச்சி தரப்பினரின் ஜனநாயக ஆட்சி அகற்றப்பட்டு இராணுவ ஆட்சியும் அவசரகால நிலையும் அறிவிக்கப்பட்டது. இராணுவ ஆட்சிக்கு எதிராக மியான்மரில் பல இடங்களில் தொடர்ந்து போராட்டங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தலைநகர் நைபிட்டோ, வர்த்தகநகர் யாங்கூன் ஆகிய பகுதிகளில் பிக்குகள் இணைந்து ஆர்ப்பாட்டங்களையும் பேரணிகளையும் நடத்தியுள்ளனர்.
மியான்மர் இராணுவம் இராணுவ ஆட்சியைக் கைவிட்டு சூச்சி தரப்பினரிடம் ஆட்சியை மீண்டும் ஒப்படைக்க வேண்டும், அவசரகால நிலை திரும்பப் பெறப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். (ம)



ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவால் பயன்படுத்தப்பட்டுவந்த பக்ரம் படைத்தளம் தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குள் தற்போது முழுமையாக வந்துள்ள நிலையில், அதைத் தமது பிரமாண்ட இராணுவத் தளமாக தலிபான்கள் மாற்றிவருகின்றனர். அது தொடர்பான ஒளிப்படங்கள் வெளியாகியுள்ளன. (ம)

# ஷரிஆ சட்டத்தின்படி தண்டனைகள் கிட்டும்

## தலிபான்கள் அறிவிப்பு

காபூல், செப். 27
ஆப்கானிஸ்தானில் மீண்டும் ஷரிஆ சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். அதற்கேற்ப தண்டனைகள் வழங்கப்படும் என்று தலிபான்கள் அறிவித்துள்ளனர். இதுகுறித்து ஆப்கானிஸ்தானின் சிறைத்துறை பொறுப்பாளர் முல்லா நூருதீன் துராபி தெரிவித்ததாவது:
எங்களது முந்தைய ஆட்சியில் நிறைவேற்றியதைப்போல மதச் சட்டங்களின் கீழ் கடுமையான தண்டனைகள் இந்த முறையும் வழங்கப்படும். மரண தண்டனைகள், கைகால்களை வெட்டுதல் போன்ற தண்டனைகள் மீண்டும் அறிமுகப்படுத்தப்படுகின்றன. நாட்டின் பாதுகாப்பை உறுதிசெய்ய உறுப்புகளை துண்டிக்கும் தண்டனை மிகவும் அத்தியாவசியமானது. 1990ஆம் ஆண்டுகளில் இந்தத் தண்டனைகள் பொது இடங்களில் நிறைவேற்றப்பட்டன. இந்தத் தடவை பொதுமக்கள் முன்னிலையில் இல்லாமல் தனி இடங்களில் தண்டனைகள் நிறைவேற்றப்படலாம். எங்களது சட்டம் என்னவாக இருக்க வேண்டும் என்று யாரும் எங்களுக்கு சொல்லத்தேவையில்லை - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23,000 ஆண்டுகள் பழமையான மனிதக் காலடி அமெரிக்காவில்

வொஷிங்டன், செப். 27
அமெரிக்காவில் 23 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய மனிதனின் கால் தடத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அமெரிக்காவின் வடக்குப் பகுதியில் உள்ள நியூ மெக்சிக்கோ மாகாணத்தில் இடம்பெற்றுவரும் ஆய்விலேயே மேற்படி காலடித் தடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
இதுதொடர்பில் ஆய்வாளர்கள் தெரிவித்ததாவது:
நியூமெக்சிக்கோ மாகாணத்தில் புதைபடிவ காலடித் தடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தினரின் காலடித்தடங்களும் கண்டறியப்பட்டன. மேலதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்றனர். (ம)





# இன்றைய நாள்

**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத்துணை வழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதர வகையில் வீண்செலவுகள் ஏற்படும். காரியம் ஒன்று அனுகூலமாக முடியும்.

**கடகம்:** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் செயல்பாடுகள் வீட்டில் கலகலப்பான சூழ்நிலையை ஏற்படுத்தும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கன்னி:** தந்தைவழி உறவுகளால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஒத்துழைப்பு தருவார்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆனால், திடீர் செலவுகளால் கையிருப்பு கரையும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். தாய்வழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. செலவு செய்ய வேண்டி வரும்.

**கும்பம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக சில வேலைகளை எடுத்துச் செய்ய வேண்டி வரும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களுக்காக செலவு செய்ய நேரிடும். நண்பர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். மனவருத்தம் ஏற்படக்கூடும்.


# செயற்கைமுறைக் கருக்கட்டலும் அதற்கான ஆயத்தப்படுத்தலும்



**மருத்துவ நிபுணர் டாக்டர்.சி.ரகுராமன்**
MBBS, MD (Obs&Gny), MRCOG(UK)
சிரேஷ்ட விரிவுரையாளர்,மருத்துவபீடம்,யாழ்ப்பாணம்.
பெண்ணியல் மற்றும் மகப்பேற்று வைத்தியநிபுணர்,
யாழ். போதனா வைத்தியசாலை.



## குழந்தையின்மைக்கான விளக்கங்களும் தீர்வுகளும்



7

இன்றைய காலகட்டத்தில் மிக முக்கிய பிரச்சினையாகக் காணப்படும் கருத்தரித்தலில் ஏற்படும் தாமதத்துக்கான காரணங்களைக் கண்டறியும் பரிசோதனைகளும் அதற்குரிய சிகிச்சை முறைகளும் விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் கருத்தரித்தலில் ஏற்படும் தாமதத்துக்காகக் காணப்படும் "செயற்கைமுறைக் கருக்கட்டல்" சிகிச்சையானது, தற்போது இலங்கை போன்ற வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் கூட பயன்படுத்தப்படுகின்ற மேம்பட்ட சிகிச்சை முறையாகும். 1978 இல் முதன்முறையாக இங்கிலாந்தில் வெற்றிகரமாக செயற்கைமுறைக் கருக்கட்டல் மூலமாக முதலாவது பரிசோதனைக் குழாய் குழந்தை உருவாக்கப்பட்டதிலிருந்து, இன்றுவரை மில்லியன் கணக்கான தம்பதியினருக்கு இந்தச் சிகிச்சை முறை பயன்பட்டதுடன் , 1999 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை இலங்கையிலும் இம் மேம்பட்ட சிகிச்சைமுறையானது பயன்பட்டுவருகின்றது.

இந்தச் செயற்கைமுறைக் கருக்கட்டல் சிகிச்சைகள் IVF (In Vitro Fertilization) அல்லது test tube baby (பரிசோதனைக் குழாய் குழந்தை) எனும் பல்வேறு பெயர்களில் மக்கள் மத்தியில் பரவலாக அறியப்படுகின்றன.

இந்தச் செயற்கைமுறைக் கருக்கட்டலானது பெண்ணின் முட்டையையும் ஆணின் விந்தையும் ஆய்வு கூடத்தில் கருக்கட்டவைத்து, அந்தக் கருவை பெண்ணின் கருப்பையினுள் வைக்கும் சிகிச்சை முறையாகும். இந்தச்சிகிச்சை முறையின் பல்வேறு படிநிலைகளுக்கு உயர்தொழிநுட்ப வசதிகள் மிக அவசியமாகத் தேவைப்படும் காரணத்தினால் அடிப்படைச் சிகிச்சைமுறைகளினை விட மேம்பட்ட இந்தச் சிகிச்சைமுறைகளுக்காக ஏற்படும் செலவும் அதிகமாகக் காணப்படுகிறது. உயர்தொழினுட்பவசதிகள் மற்றும் அதற்கான செலவு காரணமாக தற்காலத்தில் இந்தச் சிகிச்சை முறையானது இலங்கையில் தனியார் வைத்தியசாலைகளில் மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது.


இம்மேம்பட்ட சிகிச்சைமுறையானது கருத்தரித்தல் தாமதம் ஏற்படும் தம்பதிகளில் சில குறிப்பிட்ட காரணங்களுக்காகத் தெரிவுசெய்யப்படுகின்றது. இந்தச் சிகிச்சை முறையானது பலோப்பியன் குழாய் அடைபட்டமை,அடிப்படைச் சிகிச்சையின் பின்பும் முட்டை விருத்தியின்மை, விந்தணுக்களில் ஏற்படும் குறைபாடு, தம்பதியினரில் அடிப்படைச் சிகிச்சைமுறைகள் வெற்றியளிக்காத சந்தர்ப்பங்களிலும் காரணம் இல்லாமல் கருத்தரிக்காத தம்பதியினருக்கும் பரிந்துரைக்கப்படுகிறது. இருப்பினும், இந்தச் சிகிச்சையை விரும்பும் தம்பதியினர் இதனை முதற்படியாகவும் ஆரம்பிக்கலாம். அடுத்ததாக இந்தச் செயற்கைமுறைக் கருக்கருக்கட்டல் சிகிச்சைமுறையானது ஒரு குழுவினால் மேற்கொள்ளப்படும்.

இந்தக்குழுவில் கருத்தரித்தல் தாமதமடைவதற்கான சிகிச்சைமுறைகளில் சிறப்புத்தேர்ச்சிபெற்ற மருத்துவ நிபுணர்களும் (VOG,Embryolist) தாதிய உத்தியோகத்தர்களும் காணப்படுவர். இந்தச் சிகிச்சைமுறைக்காகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட உயர்தர தொழில்நுட்பவசதிகளுடன் கூடிய ஆய்வு கூடமும் , சத்திரசிகிச்சைக் கூடமும் அவசியமாகும். இந்தச் சிகிச்சைமுறையானது மேற்கொள்ளப்படும் முன்னராக தம்பதியிருக்கு வழங்கப்படும் மருத்துவ மற்றும் உளநல ஆலோசனையானது இந்தச் சிகிச்சைமுறையின் வெற்றிக்கு உறுதுணையாக அமையும். இதற்கு முன்னரான மருத்துவ ஆலோசனையின் போது பழைய சிகிச்சை முறைகள் ஆராய்ந்து பார்க்கப்படுவதுடன் ,சில நோய்நிலைமைகளைக் கண்டறிய விரிவான மருத்துவக் கணிப்பீடும் இடம்பெறும். பின்னர் இரத்தம், விந்துமாதிரிகளின் ஆய்வுகூடப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் (FBC,HbA1C,Thyroidprofile) இந்தப்பரிசோதனை முடிவுகள் கிடைக்கப்பெற்றவுடன் மருத்துவ ஆலோசனையானது இம் முடிவுகளினை விளங்கப்படுத்துவதாகவும் அடுத்தகட்ட சிகிச்சைமுறையினைத் திட்டமிடுவதாகவும் அமையும்.

இந்தச் சிகிச்சைக்காக தம்பதியினரைத் தயார்ப்படுத்தும் போது குறிப்பாக நீரிழிவு,தைரொயிட் பிரச்சினைகள் , உயர் குருதியமுத்தம் முதலிய நோய்களுக்கான சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, கண்டறியப்பட்டு தேவையேற்படின் சிகிச்சைவழங்குதலும் இடம்பெறும். இந்தச்சிகிச்சை மேற்கொள்ளும் காலப்பகுதியில் சமநிலையான உணவுப்பழக்கங்களை மேற்கொள்ளல் ஆரோக்கியமான சுறுசுறுப்பான வாழ்க்கைமுறையைக் கடைப்பிடித்தல என்பன சிகிச்சைமுறையின் வெற்றிக்குப் பங்களிக்கும். உதாரணமாக அதீத உடற்பருமன் கொண்ட தம்பதியினர் உடல் நிறையைக் குறைத்தல் ,சிகரெட் மற்றும் மதுபான வகையை நிறுத்துதல் போன்ற வாழ்க்கைமுறை மாற்றங்களைக் குறிப்பிடலாம். தம்பதியினரில் சிகிச்சைக்காக போலிக்கமிலம் (Foilc acid) ,மற்றும் சில விற்றமின்களும் கனியுப்புக்களும் பயன்படுத்தப்படல் ஆரோக்கியமான கரு உருவாதலில் தாக்கம் செலுத்துவதாக விஞ்ஞானரீதியான தரவுகளின் அடிப்படையில் நம்பப்படுகிறது.

உளவியல் தொடர்பாக தம்பதியினரை ஆயத்தப்படுத்தும் படிநிலையில் உளவளத்துணையாளர் ஒருவரின் உதவியுடன் உளவியல் ஆலோசனைகள் வழங்கப்படல் , தியானம் (meditation) மற்றும் யோகா போன்ற பயிற்சிகளை மேற்கொள்ள ஊக்கமளித்தல் என்பன உள்ளடங்கும். அத்துடன் உளவள ஆலோசனைகளும் தீர்வுகளும் தம்பதியினரில் காணப்படும் மனஅழுத்தத்தைக் குறைப்பதுடன், கருத்தரித்தல் வீதத்தை அதிகரிப்பதாகவும் விஞ்ஞானரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே இந்தச் சிகிச்சைமுறையின் வெற்றிக்கு சிகிச்சையை ஆரம்பிப்பதற்கு முன்பாக மருத்துவ ஆலோசனையைப் பெற்று,வாழ்க்கைமுறையில் மாற்றங்களினை ஏற்படுத்தி, தரப்படும் சிகிச்சையினை (உதாரணமாக மருந்துகள்) சரியாக எடுத்துக் கொள்ளலும் ,உளவியல் தொடர்பான ஆலோசனைகளைப் பின்பற்றலும் முக்கியமானதாகவே காணப்படுகிறது. ஏனெனில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்தச் செயற்கைமுறைக் கருக்கட்டல் சிகிச்சைக்காக வருகை தரும் தம்பதியினரில் வயது அதிகமாகக் காணப்படுதலும் தொற்றாநோய்களுக்கான அபாயக் காரணிகள் காணப்படுதலும் ,மேலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட சிகிச்சைகளினால் மனஉளைச்சல் போன்ற உளத்தாக்கங்கள் காணப்படுதலும் அவதானிக்கப்பட்டுள்ளது. ஆகவே ஒவ்வொரு தனிப்பட்ட குடும்பத்தினதும் பொருளாதாரக் கட்டமைப்புக்கு ஏற்றவகையிலும் ,தம்பதியினரில் காணப்படும் பிரச்சினைகளுக்கு ஏற்ப தனிப்பட்ட முறையில் திட்டமிடப்பட்ட சரியான சிகிச்சை முறையைத் தேர்ந்தெடுப்பதிலும் மருத்துவ ஆலோசனை இன்றியமையாததாகக் காணப்படுவதுடன் செயற்கைமுறைக் கருக்கட்டல் சிகிச்சையின் வெற்றிக்குப் பெரிதும் பங்குவகிக்கின்றது.



தம்பதியினர் மருத்துவ மற்றும் உளவியல் ரீதியாக ஆயத்தப்படுத்தப்பட்டபின்னர் செயற்கைமுறையான கருக்கட்டல் சிகிச்சை எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது என விரிவாகப் பார்க்கலாம். பொதுவாக பெண்ணின் கருமுட்டையையும், ஆணின் விந்தையும் ஆய்வு கூடத்தில் கருக்கட்டவைத்து, அந்தக் கருவினைப் பெண்ணின் கருப்பையினுள் வைக்கும் சிகிச்சைமுறையாகக் காணப்பட்டாலும் ,தம்பதியினரில் காணப்படும் பிரச்சினைகள் அடிப்படையில் தனிப்பட்டரீதியில் வடிவமைக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படும். இந்தச் சிகிச்சையைஆரம்பிக்கும் முன்னராகச் செய்யப்படும் சில பரிசோதனைகள் சிகிச்சையில் சரியாகத் திட்டமிட்டு வெற்றியளிக்கும் நோக்கில் செய்யப்படும். இவற்றில் பெண்களுக்கான ஸ்கான் மூலம் சூலகத்தில் காணப்படும் முட்டைகளின் எண்ணிக்கை மற்றும் அளவு (antral folilcular count) என்பன முட்டை வளர்ச்சியின் வினைத்திறனை எதிர்வுகூற உதவும். இந்த ஸ்கான் ஆனது மாதவிடாய்க்கு பின்னர் 2-3 ஆம் நாளில் செய்யப்படும். மேலும் 'AMH' எனப்படும் ஒருவகையான ஹோமோனின் அளவினை குருதிமாதிரியில் பரிசோதித்தல் போன்ற பரிசோதனைகளும் இதே நோக்கில் இடம்பெறும். இவ்விரு பரிசோதனைகளுடன் பெண்ணின் வயது,முன்னர் சூலகத்தில் இடம்பெற்ற சத்திரசிகிச்சைகள், என்டோமற்றியோசிஸ் போன்ற நோய் நிலைமைகளினால் சூலகத்தில் காணப்படும் முட்டைகளின் எண்ணிக்கை மற்றும் தரம் என்பவற்றினை அறிந்துகொள்ள உதவும்.

ஆண்களுக்காகச் செய்யப்படும் பரிசோதனையாக சுக்கிலப்பாய அறிக்கையானது காணப்படுகிறது. இந்தப் பரிசோதனையில் விந்துக்களின் எண்ணிக்கை, அசையும் தன்மை, உருவஅமைப்பு போன்றன அறியப்படும். இந்த அறிக்கைப்படி விந்துக்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில் முட்டையினுள் நேரடியாக விந்தணுவை ஆய்வுகூடத்தில் உட்செலுத்தும் (ISCI) முறை மூலமாக செயற்கைமுறைக் கருக்கட்டல் சிகிச்சை இடம்பெறும். இந்த அறிக்கையில் விந்தணுக்கள் எதுவும் காணப்படவில்லை எனின் அல்லது விந்தணுக்களில் குறைபாடுகள் அவதானிக்கப்படும் சந்தர்ப்பங்களில் மேலதிக சிகிச்சைக்காக சனனி சிறுநீரக சத்திரசிகிச்சை நிபுணர் ஒருவரின் மருத்துவ ஆலோசனை பெறப்படும். கருத்தரித்தல் தாமதமடைவதற்கான காரணமானது அறியப்படாத சந்தர்ப்பங்களில் முன்னைய கட்டுரையில் விபரிக்கப்பட்ட ஆண்களுக்கான பரிசோதனைகளான ஓமோன் , ஸ்கான் ,மரபணுச் சோதனைகள் போன்றன இடம்பெற்று சரியான முறையில் தகுந்தகாரணம் அறியப்பட்டு செயற்கை முறைக் கருக்கட்டல் சிகிச்சைகளுக்காக ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படும். ஆண்களில் விந்து எண்ணிக்கை மிகக்குறைவாக அல்லது பெண்களில் முட்டைகளின் எண்ணிக்கை, தரம் மிகக்குறைவாகக் காணப்படும் சில சந்தர்ப்பங்களில் தானமாக விந்து அல்லது முட்டை பெறப்பட்டு செயற்கைமுறைக் கருக்கட்டல் சிகிச்சையானது வழங்கப்படக் கூடிய வாய்ப்புக்களும் காணப்படுகின்றன.

செயற்கைமுறைக் கருக்கட்டல் சிகிச்சைகள் ஆரம்பிக்கும் முன்னராக சிகிச்சை பற்றிய பூரணவிளக்கம் அதற்கான செலவு,வெற்றியளிக்கும் வீதம் மற்றும் குறிப்பாக முட்டை மற்றும் விந்துதானம் தொடர்பான விளக்கங்கள் தம்பதியினருக்கு மீண்டும் வழங்கப்பட்டு அவர்களுக்கு உள்ள சந்தேகங்கள் தெளிவாக்கப்படும்.

தம்பதியினரின் சம்மதமானது சம்மதப்படிவம் ஊடாகப் பெற்றுக் கொள்ளப்படும். இந்தச் சம்மதப் படிவத்தில் தம்பதியினரின் சம்மதத்தை வெளிப்படுத்தும் இருவரினதும் கையொப்பங்களும் சிகிச்சையளிக்கும் மருத்துவரின் கையொப்பம்,சாட்சியாளரின் கையொப்பம் போன்றனவும் இடம்பெறும் . அத்துடன் தம்பதியினரின் ஆளடையாளத்தினை சட்டரீதியான தேவைகளுக்காக உறுதிப்படுத்தும் நோக்கில் தம்பதியினரின் சுயவிபரக்கோவையுடன் தேசிய அடையாள அட்டை மற்றும் திருமணப் பதிவுச் சான்றிதழின் பிரதிகளும் இணைக்கப்படும். இந்தச் சம்மதப்படிவமானது சட்டரீதியாக ஒரு முக்கிய ஆவணமாகவும் சிகிச்சைக்கான தம்பதியினரின் விருப்பத்தை வெளிப்படுத்தும் படிவமாகவும் காணப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் பணவீக்கம் அதிகரிப்பு

கொழும்பு, செப்.25
வருடாந்த உணவுப் பணவீக்கம் கடந்த 11 மாதங்களில் ஓகஸ்ட் மாதத்தில் அதிகபட்சமாக 11.1 வீதமாக உயர்ந்துள்ளது என்று சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத் தரவு தெரிவிக்கிறது.
இதைவிட அதிக அதிகரிப்பு 2020 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பதிவாகியிருந்தது. அந்த மாதத்தில் உணவுப் பணவீக்கம் 12.7 வீதம் ஆக உயர்ந்தது.
கடந்த மாத உணவுப் பணவீக்கத்தின் அதிகரிப்பு, ஒரு குடும்பத்தின் அரிசி நுகர்வுச் செலவு சராசரியாக ரூ. 525.48 ஆல் உயர்ந்துள்ளது. இதன் விளைவாக ஒட்டுமொத்த குடும்பத்தின் உணவுக் கூடையின் விலை சராசரியாக ரூ.2 ஆயிரத்து 248.07 ஆல் அதிகரித்துள்ளது. (எ)


# அசாத் சாலி பேசினால் இனவாதம் ஞானசாரர் பேசினால் இல்லையா?

## சாணக்கியன் எம்.பி. கேள்வி



**கொழும்பு, செப்.25**
**உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி அல்லாஹ் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். ஞானசார தேரர், ஜனாதிபதியின் உத்தியோகபூர்வமற்ற ஊடகப் பேச்சாளராக விளங்குகிறார்.**

இவ்வாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாணக்கியன்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது பிரதமர் மஹிந்த ராஜபக்ச இத்தாலிக்குச் சென்றபோது மக்கள் அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து கோஷங்களை எழுப்பியிருந்தனர். அமெரிக்காவுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்ப மக்கள் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள் என்று நாங்கள் அறிகின்றோம்.
கடந்த காலங்களில் இவ்வாறு கோஷங்களை எழுப்பியவர்கள் புலம்பெயர்ந்துள்ள தமிழ் மக்களாகவே காணப்பட்டனர். இப்போது நாட்டிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மற்றும் வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் கோஷமெழுப்புகின்றனர்.
ஞானசாரதேரர் கடும் இனவாத போக்குடன் செயற்படுகிறார். அவரது கருத்துக்களும் அவ்வாறே உள்ளன. நாங்கள் இனவாதமாகச் செயற்படும் மதத்தலைவர்களுக்கு கடுமையான எதிர்ப்பை வெளியிடுவோம்.
அடிப்படைவாத தாக்குதல்தாரிகளுக்கு சூத்திரதாரி அல்லாஹ்தானென ஞானசாரதேரர் சொல்கிறார். அவரின் கருத்தைக் கண்டிக்கிறேன்.
இந்தக் கருத்துத் தொடர்பில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மௌனம் காப்பதேன்?. எந்த நேரத்திலும் இலங்கையில் தாக்குதல் நடக்கலாம் என்று ஞானசார தேரர் கூறுகிறார். அப்படியானால் முதலீட்டாளர்கள் எப்படி நாட்டுக்கு வருவார்கள்?.
ரிசாத், அஷாத் சாலி பேசினால் இனவாதம், ஆனால் ஞானசாரர் பேசினால் அது இனவாதம் இல்லையா? நான் இங்கு உரையாற்றிக் கொண்டிருக்கும் போது இங்கு கூச்சலிடும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் மீண்டும் தனது தொகுதிக்கு வந்தால், அவரைப் போன்றவர்களை மக்கள் அடித்து விரட்ட வேண்டும். -என்றார். (எ-இ)



# நுழைவிசைவின் காலத்தை அதிகரிக்க சட்டத் திருத்தம்!

கொழும்பு, செப்.25
நுழைவிசைவு அனுமதிக் காலத்தை 5 ஆண்டுகள் வரை நீடிப்பது உள்ளிட்ட விடயங்களை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள குடிவரவு குடியகல்வு (திருத்தச்) சட்டவரைவு இரண்டாவது வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.
கடந்த புதன்கிழமை நடந்த பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனைக் கூட்டத்தில் இதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
தற்பொழுது நுழைவிசைவு அனுமதியை வழங்கக்கூடிய கால எல்லையான 2 வருடங்களை 5 வருடங்கள் வரை இந்தத் திருத்தத்தின் ஊடாக அதிகரிக்கப்படும் என்று குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஜெனரல் சரத் ரூபசிறி தெரிவித்தார்.
வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.
அதேவேளை, இந்தத் திருத்தத்தின் ஊடாக வதிவிட நுழைவிசைவு முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்றும், இது தொடர்பான ஒழுங்குவிதிகள் எதிர்வரும் காலத்தில் தயாரிக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# விகிதாசார தேர்தல் முறையை மாற்றுவதை ஏற்கவே முடியாது

## தேர்தல் முறைமைத் தெரிவுக்குழுவுக்கு மனோ தெரிவிப்பு

கொழும்பு, செப். 25
இன்றைய நிறைவேற்று ஜனாதிபதி முறைமை, 20 ஆம் திருத்தத்தின் மூலம் மேலும் பலமாக்கப்பட்ட நிலையில், மாகாணசபை, நாடாளுமன்ற தேர்தல் முறைகளை கலப்பு முறைக்கு மாற்றி, சிறிய கட்சிகளின் பிரதிநிதித்துவங்களையும் ஒழித்து, மாகாணசபை, நாடாளுமன்ற மக்கள் மன்றங்களை மேலும் பலவீனமாக்க இடமளிக்கவோ முடியாது - என்று தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.
தேர்தல் முறைமை சீர்திருத்தக் குழுவில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
தேர்தல் முறைமை சீர்திருத்தத் தெரிவுக் குழு நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று தவிசாளர் அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையில் கூடியபோது, த.மு.கூ. தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர் வி.ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட குழுவினர் தமது கருத்துக்களை நேற்று எடுத்துக் கூறினர் அதன்போதே மனோகணேசன் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில் நீண்டகாலமாக பேசப்பட்டு வந்த தேர்தல் முறை மாற்றம் எமது ஆட்சிக்காலத்தில் கலப்பு முறைக்கு பரீட்சார்த்தமாக மாற்றப்பட்டது. ஆனால், அந்த மாற்றம் உள்ளூராட்சி மன்றங்களில் நிலையான ஆட்சிக்கு வழிகாட்டவில்லை. அத்துடன் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை நாடெங்கும் ஏறக்குறைய அறுபது முதல் எழுபது விகிதம் அதிகரித்தது. ஆனாலும், குழப்ப நிலைமையே ஏற்பட்டது.
இந்நிலையில், இதே விதமான குழப்ப நிலைமையை மாகாணசபை, நாடாளு மன்றங்களிலும் ஏற்படுத்தி இந்நாட்டின் ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்க வேண்டாம். எமக்கு முன் சாட்சியம் அளித்த இன்னொரு கட்சியின் பிரதிநிதி, சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவங்களை வெட்டிக் குறைத்தால், அவர்கள் கடந்த காலங்களைப்போல் வேறுவழி இல்லாமல், ஆயுதம் தூக்கும் நிலைமைக்குத் தள்ளப்படுவார்கள் என எச்சரித்தார்.
அது உண்மை. ஆனால், அந்த நிலைமை வடக்கில் மட்டுமல்ல. தெற்கிலும் ஏற்பட்டது என்பதை நான் இந்தக் குழுவுக்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நாடாளுமன்றத்தில் நியாயமான பிரதிநிதித்துவங்களைப் பெற முடியாத நிலையில், தென்னிலங்கையிலும் சிங்கள இளையோர் இப்படி ஆயுதம் தூக்கினார்கள்.
இன்று விகிதாசார முறையின் கீழ்தான் இந்த நிலைமை மாறியது.
நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை அறிமுகம் செய்த ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனதான், உள்ளூராட்சி, மாகாணசபை, நாடாளுமன்றங்களுக்கு விகிதாசார தேர்தல் முறைமையையும் கொண்டு வந்து அறிமுகம் செய்தார்.
ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் சில பிழையான செய்கைகளுக்கு மத்தியில் அவரது தீர்க்கதரிசனமிக்க சரியான செய்கை இதுவாகும். இன்று நீங்கள் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இன்னமும் பலமிக்கதாக 20ஆம் திருத்தத்தின் மூலம் மாற்றியுள்ளீர்கள். இது உண்மை.
எனவே ஒரு சிலரின் தேவைகளுக்காக, விகிதாசார தேர்தல் முறைமையை மாற்றி நாட்டை சர்வாதிகார படுகுழியில் தள்ள வேண்டாம் -என்றார். (ம)

# ஞானசார தேரரின் கருத்தால் முஸ்லிம்களுக்கு அபகீர்த்தி

## முஜிபுர் எம்.பி. சீற்றம்

கொழும்பு, செப்.25
பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரின் சோடிக்கப்பட்ட கருத்துக்களால் முஸ்லிம்களுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.
நாடாளுமன்றில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் மீண்டும் ஒரு பயங்கரவாதத் தாக்குதலை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.
ஞானசார தேரர் குரான் தொடர்பில் தெரிவித்த கருத்துக்கள் அனைத்தும் திரிபுபடுத்தப்பட்ட பொய்யான குற்றச்சாட்டுக்கள். உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியாக அல்லாஹ்வை குறிப்பிட்டு கூறியுள்ளதால், உலகில் உள்ள கோடிக் கணக்கான முஸ்லிம்களின் நம்பிக்கைக்கு அவர் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளார்.
முஸ்லிம் மதத் தலைவர்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் ஞானசார தேரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா? -என்றார். (ஓ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 06 . 1977



மறைவு 22 . 09 . 2021

### திருமதி தமிழினி பிரபாகரன்

(அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், உடுவில்)

ஆஸ்பத்திரியடி கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் கே.கே.எஸ் வீதி கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தமிழினி பிரபாகரன் கடந்த (22.09.2021) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் (நில அளவைத் திணைக்களம்) - பேரின்பராஜி (லிகிதர் - யாழ். கச்சேரி) தம்பதியரின் பாசமிகு மகளும், வயிரவப்பிள்ளை மற்றும் காலஞ்சென்ற பத்மாவதி தம்பதியரின் அன்பு மருமகளும், பிரபாகரனின் (ஆசிரியர் - யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி) பாசமிகு மனைவியும், துவாரகனின் (மாணவன் - யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி) அன்புத் தாயாரும், ஜமுனா (சுவிஸ்), ஜெயமயூரன் (லண்டன்), யாழினி (லண்டன்), கஜேந்திரா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், செல்வக்குமார், மனோஜா, மதியழகன், தனோயா, சுதாகரன், கார்த்திப்பிரியா (டுபாய்), வரதராஜன் (உதவிப் பிராந்திய முகாமையாளர் - Abans), சுதர்சினி (அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், உடுவில்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் நாளை (26.09.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கோண்டாவில் மேற்கு.**
**077 605 1245.**

**தகவல்:**
**வ.பிரபாகரன் (கணவர்)**

## மரண அறிவித்தல்



**பிறப்பு :18.11.1945** **இறப்பு: 24.09.2021**

### சுசீலாதேவி தர்மலிங்கம்

யாழ். இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், தமிழ்நாடு- சென்னையை வசிப்பிடமாகவும் கொண்ட சுசீலாதேவி நேற்று (24.09.2021) சென்னையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (இராசா விதானையார்) இரத்தினம்மா தம்பதிகளின் மகளும், சுப்பையா தர்மலிங்கத்தின் மனைவியும், சுதர்ஜினி, சுதாஹரன், சுதாரிணி ஆகியோரின் தாயாரும், அன்னலட்சுமி, நல்லையா, அருந்தவமலர், ஞானகலாராணி, சரவணபவன் மற்றும் சர்வானந்தா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.09.2021) சென்னையில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அவர்தம் குடும்ப நலன் விரும்பிகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## தேவை

தானிய வகை, தேங்காய், கொப்பறா கொள்வனவு செய்யப்படும்.
மில் வேலை ஆட்கள் தேவை
**தொடர்பு: 077 772 2215**

## Online English Classes

தமிழ் மொழி மூலம் Spoken English, Grammer சகல வயதினருக்குமான வகுப்புக்கள்

**Contact 075 143 5606**

## தவறவிடப்பட்டுள்ளது

கணபதிப்பிள்ளை கருணாமூர்த்தி எனும் பெயர் கொண்ட சாரதி அனுமதிப்பத்திரம் 16.08.2021 அன்று யாழ்ப்பாணத்திற்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் தொலைபேசிக்கு தொடர்புகொள்ளவும்.

**077 414 6425** க.கருணாமூர்த்தி

## விதை நெல் விற்பனைக்கு

சுத்திகரிக்கும் இயந்திரம் மூலம் சுத்திகரிக்கப்பட்டு முளைத்திறன் பரிசீலிக்கப்பட்ட அதிக விளைச்சலைக் கொண்ட 3 1/2 மாத BG 34.6 நெல்லும் 04 மாத விதை நெல்லும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: **077 659 2044**

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை.

- **அலுமினிய பொருத்துனர்** – 1500.00 - 2000.00
- **மின் இணைப்பாளர்** (Electrician - 1500.00
- **குழாய் பொருத்துனர்** (Plumber ) - 1500.00

**காலை 8.30 தொடக்கம் மாலை 6.00 வரை தொடர்பு கொள்ளவும்**

**076 058 6045**

## மணமகள் தேவை

யாழ் இந்து, 1987, மிருகசீரிடம் 4ம் பாதம், சூரி.செவ் 3இல், கி.பா 6, அரச பணி புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:
**077 616 1739**

## வீடு காணி விற்பனைக்குண்டு

சுன்னாகம் வாழைக்குலைச் சந்தி ஒழுங்கைக்கு அருகாமையில் வீடு மற்றும் கிணற்றுடனான 2 ½ பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**077 465 4577**

## தவறிவிட்டது

நேற்று (24.09.2021) யாழ் கே.கே.எஸ் வீதியில் சத்திர சந்தியடியில் புவனேந்திரன் யான்சன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (802693370V), வாகன சாரதி அனுமதிப்பத்திரம், ATM காட் ஆகியவை அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: **077 163 4305**

## காணி வாடகைக்கு

B.A தம்பி ஒழுங்கையில், K.K.S வீதியிலிருந்து சுமார் 400m தூரத்தில் சுற்றிவர மதிலுடன் கூடிய அறுக் கையுள்ள 1 ¼ பரப்புக் காணி வாடகைக்கு உண்டு. கராஜ், ஒட்டுத் தொழிலகங்கள் முதலியன அமைத்துக் கொள்ளலாம்.


தொடர்பு: ச. மகிந்தன் **077 820 9424**

## மணமகன் தேவை

யாழ் இந்து, 1991, மூலம் 1ம் பாதம், செவ் 6இல், கி.பா 39, 1/4, அரச பணிபுரியும் மணமகளுக்கு மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு:
**077 616 1739**

# பதற்றமற்ற வெற்றியுடன் முதலிடத்தில் சி.எஸ்.கே.



சார்ஜா, செப். 25

ஐ.பி.எல். தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸை அபாரமாக வீழ்த்தி புள்ளிப் பட்டியலில் முதலிடம் பிடித்தது சென்னை சுப்பர் கிங்ஸ். அத்துடன் பிளேஆப் சுற்றை உறுதிப்படுத்தும் நிலைக்கும் சென்னை சென்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இந்த ஆட்டம் சார்ஜாவில் இடம்பெற்றது. சார்ஜா சிறிய மைதானம். எனவே ஆரம்பம் முதல் அதிகளவான பவுண்டரிகளுடன் இன்னிங்ஸைக் கட்டமைக்க வேண்டிய தேவை ஆர்.சி.பிக்கு இருந்தது. அதற்கேற்பவே ஆர்.சி.பி. தன் இன்னிங்ஸையும் கட்டமைத்தது. இலக்குச் சரிவில்லாமல் 11 பந்துப்பரிமாற்றங்களில் 100 ஓட்டங்களைத் தொட்டது ஆர்.சி.பி. அதன் பின்னர் சென்னை சுப்பர் கிங்ஸ் கட்டுக்கோப்பான பந்துப்பரிமாற்றங்களை வீசி ஆட்டத்துக்குள் திரும்பி வந்தது. 53 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கோலி. அவர் இதற்காக 41 பந்துகளை எதிர்கொண்டார். படிக்கல் மறுமுனையில் நிலைத்து நின்றாலும் வில்லியர்ஸ் 12, மக்ஸ்வெல் 11 என்று ஏமாற்றினார்கள். குறைந்தது 190 ஓட்டங்களையாவது பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட ஆர்.சி.பியால் 6 இலக்குகளை இழந்து 156 ஓட்டங்களையே பெறமுடிந்தது.

பந்துவீச்சில் பிராவோ 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு ஆரம்ப வீரர்களான ஹெய்க்வாட், டுபிளஸி நம்பிக்கையான ஆரம்பத்தைக் கொடுத்தனர். அணி 71 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ஹெய்க்வாட். டுபிளஸியும் 31 ஓட்டங்களுடன் வெளியேறினார். ஆனால் ஆர்.சி.பி அணியால் சென்னையை அடக்கிவிட முடியவில்லை. சீரான பங்களிப்பை அனைவரும் வழங்கினார்கள். மொய்ன் அலி 23 ஓட்டங்களையும் அம்பதி ராயுடு 32 ஓட்டங்களையும் பெற்று வெற்றிக்கு அருகில் சென்னையை அழைத்துவந்தனர். ரெய்னா ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களையும், டோனி ஆட்டமிழக்காமல் 11 ஓட்டங்களையும் பெற சென்னை அணி இலகுவாக வெற்றிபெற்றது.

(ம)

## வீடு வளவு பராமரிப்பாளர் தேவை


மல்லாகம், தெல்லிப்பளை பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வளவு பராமரிப்பதற்கு பணிப் பெண் தேவை. பகுதி நேரமாக பணி செய்ய விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.
**சம்பளம் நேரில் பேசலாம்.**

தொடர்பு எண் **076 668 7947**

## தேவை

எமது நிறுவனத்திற்கு அனுபவமுள்ள மேசன் மற்றும் கூலியாட்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு : **077 846 9173, 075 996 9173**

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய தர்மகர்த்தாசபை செயலாளர் அவர்களின் தந்தையும், மகாசபை உறுப்பினருமாகி

### அமரர் கந்தசாமி சாந்தகுமார்

அவர்களுக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது இரங்கலை தெரிவிக்கின்றோம்.

**தர்மகர்த்தா சபை**
**யாழ் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானம்**
**(நாச்சிமார் கோவில்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் : 13.05.1935 மறைவு : 24.09.2021

## துரையப்பா மாரிமுத்து

அராலி தெற்கு கரப்பிட்டி பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா மாரிமுத்து நேற்று (24.09.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2021) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் அன்னாரது வீட்டிலிருந்து தகனக்கிரியைக்காக பூனாவோடை இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

### யாழிலிருந்து கொழும்புக்கு கஞ்சா கடத்தல்

## பொலிஸ் அலுவலர் உட்பட மூவர் காருடன் மாங்குளத்தில் கைது



முல்லைத்தீவு, செப். 25

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக் குக் காரில் கடத்தப்பட்ட 6 கிலோகிராம் கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட் டது. அதனைக் கடத்திச்சென்றனரென பொலிஸ் அலுவலர் உட்பட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுப்பிற்பகல் இடம்பெற்றது.

கஞ்சா கடத்திச்சென்றுகொண்டிருந்த போது, ஏ9 வீதி மாங்குளம் பகுதியில் சோதனையிட்டபோதே கடத்தல் தெரி யவந்தது.

கடத்தலுக்குப் பயன்படுத்திய காரும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

புத்தளத்தைச் சேர்ந்த 34 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் நொச்சியாகம பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய நபரும் யாழ்ப்பாணம் கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் வாய்முறைப்பாடு பதிவு செய்யப்பட்டு விசாரணைகளை மேற் கொண்ட பொலிஸார், முல்லைத்தீவு நீதிமன்றில் இன்று முற்படுத்தப்படுவர் என்று தெரிவித்தனர். (த-19)

## கோவில் குருக்கள் கொரோனாவால் சாவு

முல்லைத்தீவு, செப்.

முல்லைத்தீவு முள்ளியவளை கணுக் கேணி மேற்கு கற்பக விநாயகர் கோவில் குருக்கள் கொரோனாத் தொற்றுக்கு இலக்கான நிலையில் நேற்று உயிரிழந்தார்.

அதே பகுதியைச் சேர்ந்த சத்தியேந்திரா குருக்கள் (வயது - 33) என்பவரே உயிரிழந்தார்.

தொற்று அறிகுறிகளுடன் நேற்றுமுன் தினம் முல்லைத்தீவு மாவட்ட மருத்து வமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல் லப்பட்டு சிகிச்சைபெற்றுவந்த நிலை யில் அவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவில் கொரோனாத் தொற் றால் நேற்று முதியவர் ஒருவரும் உயி ரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (த-19)

## முதலாம் பக்கத்தொடர்ச்சி

**நாடு ...**

தீர்மானித்தது.

எதிர்வரும் முதலாம் திகதி நாடு திறக் கப்படும் என்ற முன்னைய அறிவிப் பைத்தவிர, ஊரடங்கு எப்போது நீக்கப் படும் என்ற விடயம் ஊடகப் பிரிவின் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தலைமையில், கொரோனா ஒழிப்புக் கான செயலணியின் கூட்டம், வீடியோ தொழில்நுட்பத்தினூடாக நேற்று நடை பெற்றது. இதன்போதே இந்தத் தீர்மா னங்கள் எட்டப்பட்டன.

ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளதாவது;

சுகாதார வழிகாட்டல்கள் 03 துறைக ளின் கீழ் தயாரிக்கப்படவுள்ளன.

அரச துறையைச் செயற்படுத்துவதற் கான முறைமைகளைத் தயாரிக்கும் பொறுப்பு பொது நிர்வாக அமைச் சிடமும் பொதுப் போக்குவரத்துச் சேவைகளுக்கான முறைமைகளைத் தயாரிக்கும் பொறுப்பு போக்குவரத்து அமைச்சிடமும், தனியார்துறைச் சேவைகளை நடத்துவதற்கான முறை மைகளைத் தயாரிக்கும் பொறுப்பு தொழிற்றுறை அமைச்சிடமும் ஒப்ப டைக்கப்பட்டுள்ளன. சுகாதார நிபுணர் குழுக்கள் மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவற்றின் வழிகாட்டல்களின் கீழ், மேற்படி பொறுப்புவாய்ந்த அமைச்சுக ளால் பரிந்துரைகள் வெளியிடப்படும்.

மேற்படி திட்டமிடல் செயற்படுத்தப்ப டும்போது, பொதுச் சுகாதாரப் பரிசோ தகர்கள், உள்ளூராட்சி மன்றங்கள், கிராமிய அபிவிருத்திக் குழுக்கள் மற் றும் ஊடகத்துறையின் முழுமையான ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**வீழ்ச்சி**

2021 இரண்டாவது காலாண்டுப் பகு தியில், 12.3 சதவீத பொருளாதார வளர்ச்சி வேகத்தைப் பேணக் கிடைத் தது. எனினும், நாட்டை மூடி வைத்தி ருப்பதால், மூன்றாவது காலாண்டில் அது ஒரு சதவீதமாகக் குறைவடைந் துள்ளது.

4ஆவது காலாண்டிலேனும், நாட்டின் பொருளாதார அபிவிருத்தி வேகத்தை 3 சதவீதமாகப் பேணும் இலக்கை நோக்கிப் பயணிப்பது அத்தியாவசி யமாகி உள்ளது. எவ்வாறெனினும், இந்த ஆண்டின் மொத்தப் பொருளா தார அபிவிருத்தி வீதத்தை 5 சதவீத மாகப் பேண எதிர்பார்க்கப்படுகின்றது.

**பாடசாலைகள்**

பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பிலான பரிந்துரைகள் சுகாதார நிபுணர்கள் குழுவால் கல்வி அமைச்சிடம் ஒப் படைக்கப்பட்டுள்ளன. ஆளுநர்கள் மற்றும் மாகாண சுகாதாரப் பணிப்பா ளர்களுக்கு, இந்தப் பரிந்துரைகளை நேரடியாக அனுப்பிவைக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

**பெற்றோருக்கும் பங்கு**

தடுப்பூசி ஏற்றும் பணிகள் முழுமை யடையும் வரை பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு, காத்திருக்கத் தேவையில்லை. என்று, யுனிசெப் உள்ளிட்ட சிறுவர்கள் தொடர் பான சர்வதேச அமைப்புகள் மற்றும் உள்நாட்டின் சிறுவர் நோயியல் விசேட வைத்திய நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள் ளனர். சிறுவர்களுக்கான கல்வி நடவ டிக்கைகள் எவ்வித தடைகளுமின்றி முன்னெடுக்கப்பட வேண்டுமாயின், பாடசாலைகள் மற்றும் முன்பள்ளி கள் என்பன விரைவாகத் திறக்கப்பட வேண்டும். அதற்கு உரிய சுகாதார வழிகாட்டுதல்களின் கீழ் நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட வேண்டும். பெற்றோரின் அர்ப்பணிப்பு மற்றும் அக்கறை போன்றன இதில் முக்கியத் துவம் பெறுகின்றன.

**தொற்று நீக்கம்**

பாடசாலைகளைச் சுத்தப்படுத்தல் மற்றும் தொற்றுநீக்கல் பணிகளுக்கு, உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுக்களின் நேரடிப் பங்களிப்புகளைப் பெற்றுக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

**ஆயுள்வேத கொரோனா சிகிச்சை**

சுற்றுலாத்துறை அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு, சுற்றுலா வலயங்க ளுக்கு அருகில் புதிய ஆயுள்வேத கொரோனா சிகிச்சை நிலையங்களை நிறுவுவது தொடர்பில் கலந்துரையா டப்பட்டது.

**இலவச சுதேச மருந்துப்பெட்டி**

சுதேச மருத்துவ அமைச்சினால், நாடு முழுவதிலுமுள்ள வீடுகளுக்கு இலவசமாக விநியோகிக்கத் திட்டமி டப்பட்டுள்ள நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் சுதேச மருந்துப் பெட்டிக் கான அனைத்துத் திட்டமிடல்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. அதற்காக 6 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத் திய பின்னர், எந்தவிதத் தடுத்து வைப் புகளுமின்றி, தெரிவு செய்யப்பட்ட ஹொட்டல்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. வெளி நாடுகளிலிருந்துவரும் இலங்கையர் கள், அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். வெளிநாடுக ளில் இருந்து வருவோருக்கு மேற் கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோத னைகளின் அறிக்கை, சுமார் 2, 3 மணித்தியாலங்களுக்குள் விநியோகிக் கப்படுகின்றமையால் இதன்போது எவ ருக்கேனும் தொற்று உறுதியானால், உரிய பொதுச் சுகாதார அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டு, தனிமைப்படுத்தல் செயற்பாடுகளுக்கான ஆலோசனை கள் வழங்கப்படும். - என்றுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
14.07.1940



மறைவு
06.10.2020

## திரு. அப்பாத்துரை சபாரட்ணம்

பாரினில் யாருண்டு - உமைப் போல
வாரித்தந்திட பாசத்தினை
ஊரினில் யாருண்டு - உமைப்போல
உதிரம் உறைந்து உருகி உழைத்திட
உத்தமராய் வித்தகராய் எமை உயர்த்தி
வளர்த்திட்ட பாசமிகு எங்கள் அப்பா
பிள்ளைகளெமை பிரிந்து ஆண்டொன்று கடந்தாலும்
உள்ளமெலாம் நீங்காத நினைவுகளாய் என்றும் நீங்களே
ஏற்றம் பல கண்டாலும் எம் வாழ்வில் - உங்கள்
தோற்றம் எம் கண்களை விட்டு அகலாது
மனையும் மாறவில்லை
மனைவியும் ஆறவில்லை
துணையாக வாழ்ந்த நீங்கள் மட்டும் எம்மை விட்டுவிலகியதேனோ?
உங்கள் ஆன்மாவும் எங்களுடன் இரண்டற கலந்து நல் நிலைப்படுத்த ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம்சாந்தி!!, ஓம் சாந்தி!!!

எச்சாட்டி வைரவர் கோயிலடி,
சுதுமலை தெற்கு.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு
02 . 08 . 1944



மறைவு
27 . 08 . 2021

## அமரர் சின்னத்தம்பி சிவநேசன்

சிரேஷ்ட சட்டத்தரணி

திதி : ஷஷ்டி

குடும்பத்தின் ஒளி விளக்காய்
எம் வாழ்வில் ஒளியேற்றிய தெய்வமே
இப்பாரினில் எம்மை பரிதவிக்க விட்டுச்
சென்றாலும் என்றும் விடிவெள்ளியாய்
வழிநடத்தும் எங்கள் தந்தையே!

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எங்கள் குடும்பத் தலைவர் சின்னத்தம்பி சிவநோசன் அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு, நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும் தொலைபேசி, மின்னஞ்சல், சமூக வலைத்தளங்கள் ஆகியவை மூலமாக எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள், சாத்தியவர்களுக்கும், இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், சகல நிகழ்வுகளிலும் எம்முடன் கைகோர்த்து இன்று வரை எமக்கு சகல உதவிகளையும் செய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எங்கள் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (26.09.2021) ஞாயிற்றுக் கிழமை அன்னாரின் இல்லத்தில் நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக மிக எளிமையாகவும் அமைதியாகவும் நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்
077 375 4243

# மரண அறிவித்தல்

பிறப்பு
31 . 03 . 1957



இறப்பு
24 . 09 . 2021

## அமரர் தவமலர் நாகராசா

### கலைவாணி நகை மாளிகை முகாமையாளர் மனைவி

அராலி வடக்கு செட்டியாமடத்தை பிறப்பிடமாகவும் நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட தவமலர் நாகராசா அவர்கள் நேற்று (24.09.2021) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் சோமசுந்தரம் நாகராசா (கலைவாணி நகை மாளிகை முகாமையாளர்) அவர்களின் அன்புத் துணைவி யாரும், சாளினி, அனோஜினி, ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தையா, பிரதீப் அவர்களின் மாமியாரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 711 1128, 077 194 4886
077 491 3587

தகவல்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

மண்ணில்
23 . 02 . 1961



விண்ணில்
21 . 09 . 2021

## தர்மலிங்கம் லீலாவதி

யாழ் வயாவிளான் திடற்புலத்தைப் பிறப்பிடமாகவும், நல்லூர் அரசடியை வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் லீலாவதி அவர்கள் கடந்த (21.09.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து-லட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வீரன் தங்கம்மா தம்பதியரின் அன்பு மரு மகளும், காலஞ்சென்ற வீரன் தர்மலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், தர்சினி (ஜேர்மனி), விதுரன், வேணுகா, தனரூபி, சுபேசன், திவ்யா ஆகியோரின் அன்புத் தாயாரும், தெகிந்தராசுவின் (ஜேர்மனி) பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற இராணியம்மா மற்றும் இரத்தினம் இரத்தின சிங்கம், சரஸ்வதி, மலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சாதுகா, தாருகா, தீபிகா, அனாமிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.09.2021) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முதலாம் ஒழுங்கை, அரசடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர் ...

இது தொடர்பில் அவர்கள் அறிக்கை ஒன்றைவெளியிட்டுள்ளனர். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

கடந்த ஆண்டு இறுதியிலும், இந்த ஆண்டு ஆரம்பித்திலும் ஒன்றிணைந்த நிலைப்பாட்டை மேற்கொள்ளச் செய்யும் சந்திப்புகளை நடத்துவதை சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களின் முயற்சியோடு மதத் தலைவர்களும் இணைந்து ஊக்குவித்தோம். சில கூட்டங்களைத் தலைமையேற்றும் நடத்தியிருந்தோம்.

அதைப் போன்ற வரலாற்றுத் தேவை மீண்டும் எழுந்துள்ளது என்று அண்மைய நாள்களில் பல மட்டங்களில் இருந்து எம்மிடம் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு முறை சிக்கல்கள் எழும்போதும், அவற்றைத் தீர்க்கவென மீண்டும் மீண்டும் புதிய முயற்சிகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, ஒரு பொதுவான மாற்றீட்டு அணுகுமுறையை வகுத்துக் கொள்வதை ஆராய்வதே பொருத்தமானது.

இந்த முயற்சியை முன்னெடுப்பதற்கான முதற்கட்டமாக சமூகத்தின் பல மட்டங்களில் இருந்தும் கருத்துக்களை உள்வாங்கி, அடுத்த கட்டமாக நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தனித் தனியாகவும், கூட்டாகவும் கலந்துரையாடி, தக்க வழியொன்றை வகுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான பூர்வாங்க செயற்குழு ஒன்றை எமது மேற்பார்வையில் உருவாக்கி வருகின்றோம்.

வடக்கு கிழக்கு இணைந்து மேற்கொள்ளும் இந்த முயற்சியில் சட்டத்துறை சார்ந்த இளம் தலைமுறையோடு, சிவில் சமூக மற்றும் மரபுரிமைச் செயற்பாடுகளில் இயங்கிய அனுபவம் கொண்டவர்களும், ஊடக அமையங்களை அமைத்துச் செயற்பட்ட அனுபவம் வாய்ந்தவர்களுமாக எந்தவித அரசியல் கட்சிப் பின்னணியும் இல்லாத ஐவர் இணைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் முதற்கட்டமாக கல்வி மற்றும் சட்டத்துறை சார்ந்தவர்களோடு கலந்துரையாடல்களை ஆரம்பித்திருக்கிறார்கள்.

இந்தப் பூர்வாங்கக் குழுவின் பொதுத் தொடர்பை சட்டத்துறை சார்ந்த மூவர் கையாள்வது பொருத்தம் என்ற ரீதியிலும், இளைய தலைமுறையின் பங்கேற்பு இப்படியான முயற்சிகளுக்கு அவசியம் என்ற நோக்கோடும் இரண்டு சட்டத்தரணிகள் பால், மத மற்றும் பிரதேச சமத்துவத்துடன் இணைக்கப்பட்டு பொதுத் தொடர்பைக் கையாள வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். செயற்குழு மற்றும் பொதுத் தொடர்பில் பங்கேற்பவர்களின் விவரங்களை, ஆரம்பக் கலந்துரையாடல்கள் முடிந்தவுடன் வெளிப்படைத்தன்மையோடு அறியத்தரும் பணியை மன்னாரைச் சேர்ந்த சட்டத்தரணி அன்ரனி றொமேஸ்சனிடம் கைளித்துள்ளோம்.

இந்தக் குழுவில் இணைந்து கொள்ளவும், ஆலோசனைகளை வழங்கவும், இந்த முயற்சியை ஊக்குவிக்கவும் விரும்புவோர் participate@tamildemocracy.org என்ற மின்னஞ்சல் ஊடாகத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

கல்வித்துறை, சட்டத்துறை, மனித உரிமை, ஊடகத்துறை மற்றும் இதர சமூகப் பரப்புகளில் இருந்து கருத்துக்களை உள்வாங்கி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரோடும் கலந்தாலோசித்து உகந்த ஒரு பொறிமுறையை வகுக்கும் பணியை முன்னெடுக்க வேண்டும் என்ற நல்லாசியுடன், இந்த முயற்சியை ஆரம்பித்து வைப்பதில் மனநிறைவடைகின்றோம். இந்த முயற்சிக்கு அனைவரின் ஆதரவும் கிட்ட இறையருளை வேண்டி நிற்கின்றோம். என்றுள்ளது. (எ-இ)

## 82 பேர் சாவு! ...

சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 530 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்தவர்களில் 31 பெண்களும் 51 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் 16 ஆண்கள், 5 பெண்கள் என 21 பேர் 30 தொடக்கம் 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 61 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 35 ஆண்களும், 26 பெண்களும் அடங்குகின்றனர்.

இதேவேளை, இலங்கையில் நேற்று ஆயிரத்து 332 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 11 ஆயிரத்து 372 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனாத்தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 950 பேர் நேற்று குணமடைந்துள்ளனர். அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 52 ஆயிரத்து 692 ஆக அதிகரித்துள்ளது. (த-22)

## யாழ்.பொலிஸாரே...

கும் தனக்கும் இடையில் தனியாள் இடைவெளியைக்கூட அவர் பின்பற்றியிருந்தார். ஆனால், பொலிஸாரே தனிமைப்படுத்தல் விதிகளை மீறிச் செயற்பட்டனர்.

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நல்லூரில் திலீபன் நினைவிடத்தில், அஞ்சலி செலுத்த முயன்றபோது நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் கைது செய்யப்பட்டமை தொடர்பில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில்,

திலீபனின் நினைவுத் தூபிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தனியாகத்தான் சென்றார். மக்களை அணிதிரட்டவில்லை. வருடாந்தம் குடும்பத்தோடு அமைதியாக அஞ்சலி செலுத்துவார். அதுபோல இந்தமுறையும் சில நாள்களாக அஞ்சலி செலுத்திவந்தார்.

ஆனால் அஞ்சலி செலுத்துவதைப் பொலிஸார் தடுத்தனர். எதற்காக தடுக்கிறீர்கள்? நீதிமன்றத் தடை உத்தரவு உள்ளதா? என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், பொலிஸாரிடம் வினவினார். எனினும், தடைசெய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினரை நினைவேந்த முடியாது என்றுகூறியே அந்த இடத்தில் கஜேந்திரனை பொலிஸார் கைதுசெய்தனர்.

எனினும், கஜேந்திரன் கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்படும் நேரத்தில் "நினைவுகூருவது தவறு என நாங்கள் வழக்குத் தாக்கல் செய்யவில்லை, கொரோனா தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியதாலே கைது செய்தோம்" என பொலிஸார் கூறினர்.

அதுமட்டுமன்றி, அராஜகமாக கஜேந்திரனின் உடலை பிடித்து, காலால் தட்டி கலவரம் போன்ற நடவடிக்கையை மேற்கொண்டனர். அவர் கைதுசெய்யப்பட்டதை அறிந்து அந்த இடத்துக்குச் சென்ற எமது கட்சியின் இரு பெண் உறுப்பினர்கள் பொலிஸாரால் சட்டவிரோதமாகக் கையாளப்பட்டனர்.

இந்த விடயத்தில், யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெனான்டோ மற்றும் நேற்றைய சம்பவத்தோடு தொடர்புடைய ஏனைய பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம். 27 ஆம் திகதி பொலிஸாரின் நடவடிக்கைகளை பொறுத்து எமது நடவடிக்கைகள் தொடரும். இது தொடர்பில் அடிப்படை மனித உரிமைகள் மீறல் சம்பந்தமாக வழக்குத்தாக்கல் செய்வது தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

சபாநாயகருக்குத் தெரியாமல் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். கஜேந்திரனின் சிறப்புரிமை தொடர்பில் நாடாளுமன்றில் கேள்வி எழுப்பவுள்ளோம். சட்டரீதியான ஆலோசனைகளையும் பெறவுள்ளோம். என்றார். (த-26)

## பால்மா...

பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போதே விலை அதிகரிப்புக்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஒரு கிலோ பால்மாவின் விலை 200 ரூபாவாலும், சமையல் எரிவாயுவின் விலை 550 ரூபாவாலும், ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 10 ரூபாவாலும், சிமெந்து மூடையொன்றின் விலை 50 ரூபாவாலும் அதிகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனினும், திங்கட்கிழமை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தின்போதே இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது. (த-44)

## இனம்...

வேண்டிய காலத்தின் கட்டாயத்தில் இருக்கிறோம்.

இவ்வாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில்,

எமது நீண்டகால குறுகியகால இலக்குகளை ஒன்றோடு ஒன்று முரண்படுத்தி குழப்பிக் கொள்ளாமல், வரையறுத்து பயணிக்க காலம் பணித்துள்ளது. இதனடிப்படையில் தமிழ்த் தேசியப் பரப்பில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் அனைத்து தமிழ்த் தலைமைகளும் ஒருமித்த நிலைப்பாட்டில் செயற்படுவது எமது இலக்குகளை கட்டம் கட்டமாகவும் நேர்த்தியாகவும் சென்றடைய வழிவகுக்கும்.

எதிர்வரும் 27 ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை சம்பந்தமான களநிலை ஆராய்வு மற்றும் கலந்துரையாடலுக்கு இலங்கை வரவுள்ளனர். அரசுடன் நடத்தும் பேச்சுகளுக்கு அப்பால் தமிழர் தரப்போடும் கலந்துரையாடுவதற்கு ஆயத்தமாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 46/1 பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்துக்கான பிரேரணையை இலங்கை அரசு நிராகரித்திருந்தது. இதை ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம் அவதானத்தில் எடுத்திருந்தது. அதன் பிரதிபலிப்பாக பயங்கரவாத தடைச்சட்டத்தை இலங்கை நீக்கும் வரைக்கும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இலங்கை அரசுக்கு வழங்குவதை தடைசெய்வதைப் பரிசீலனை செய்யத் தீர்மானித்துள்ளது. இந்த முடிவு நடைமுறைப்படுத்தப்பட்டால் இலங்கை பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக்கொள்ளும் அபாயம் ஏற்பட்டுள்ளது. - என்றுள்ளது. (த)

## கொரோனாவால்...

வயோதிபர் ஒருவர் கொரோனாத்தொற்றால் கடந்த 19ஆம் திகதி உயிரிழந்துள்ளார். இரணைப்பாலை புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 80 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அதுமட்டுமன்றி, முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் கடந்த 20ஆம் திகதி சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நபரும் 22ஆம் திகதி உயிரிழந்துள்ளார். (த-19)

## மீன் வலையில்...

குறித்த மீன், வலையிலிருந்து அகற்றி மீண்டும் கடலுக்குள் விடப்பட்டது.

வலைகளுக்கு நடுவே அதிகளவான மீன்கள் வந்த போதிலும் கோமராசி மீனின் வருகையால் மீன்கள் எதுவும் பிடிபடவில்லை. சில நாள்களுக்கு முன்பும் ஒரு கோமராசி மீன் அகப்பட்டிருந்தது. நேற்று இரண்டாவது முறையாகவும் பிடிபட்டுள்ளது. ஆழ்கடலில் வசிக்கும் இந்த வகை மீன்கள் சில நாள்களாக கரைக்கு வந்துசெல்கின்றன என்று மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (த-27)

## எரிபொருளை...

ருளைக் கடனாகப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் இந்தியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்துடன் இலங்கை அரசு பேச்சுகளை ஆரம்பித்துள்ளது.

இதன்படி இந்திய அரசிடமிருந்து 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் பெற்றுக்கொள்வது தொடர்பில் இலங்கை அரசு பேச்சுகளை ஆரம்பித்துள்ளது என ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர தெரிவித்துள்ளார் என்று 'எகனமி நெக்ஸ்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

நிலுவையில் உள்ள எரிபொருள் கொள்வனவுக்கான தொகையைச் செலுத்துவதற்கும் புதிதாக எரிபொருள் கொள்வனவு செய்வதற்குமே இந்தக் கடன் தொகை பெற்றுக்கொள்ளப்படவுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இரண்டு முக்கிய உள்நாட்டு வங்கிகளில் கிட்டத்தட்ட 3.3 பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாகப் பெற்றுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகங்களில் கூறப்பட்டுள்ளதைப் போன்று ஈரானிடமிருந்து கடன் கோரப்படவில்லை எனத் தெரிவித்துள்ள அவர், "கட்டுப்பாடுகளின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட நாடுகளுடன் நாங்கள் கடன்கள் தொடர்பான விடயங்களைக் கையாள்வோம்" எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, ஐக்கிய அரபு இராச்சியத்திடமிருந்து கடன் அடிப்படையில் எரிபொருள் கொள்வனவு செய்வது குறித்து பேச்சுகளை முன்னெடுத்துள்ளார்.

கடன் வசதியில் கச்சா எண்ணெயை கொள்வனவு செய்வது தொடர்பில் எமிரேட் நேஷனல் எண்ணெய் நிறுவனத்தின் மூத்த அதிகாரிகளுடனான பேச்சுகள் சாதகமாக முடிவடைந்துள்ளன எனவும் அமைச்சர் கம்மன்பில சில நாள்களுக்கு முன்னர் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (த -22)

## கிணற்றை...

உள்ள கிணறு ஒன்றை சுத்தம் செய்யும் போது குறித்த வெடிபொருள் அவதானிக்கப்பட்டது.

அது தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

நீதிமன்ற உத்தரவைப் பெற்று குறித்த வெடிபொருள் மீட்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-27)

## சிறந்த...

திணைக்களம் அறிவித்துள்ளது.

அவர் மட்டுமன்றி மற்றொரு கைதியும் சிறந்த பெறுபேறு பெற்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த பரீட்சைக்கு வட்டரெக்க மற்றும் மகசின் சிறைச்சாலைகளிலிருந்து 4 கைதிகள் தோற்றியிருந்தனர். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைதானத்தில் பழிதீர்ப்போம்!

## தொடரைக் கைவிட்ட நாடுகளுக்கு ரமீஸ் ராஜா கடும் எச்சரிக்கை




இஸ்லாமாபாத், செப். 25

பாகிஸ்தானுடனான தொடரைக் கைவிட்ட நாடுகளுக்கு மைதானத்தில் பதிலடி கொடுப்போம் என்று பாகிஸ்தானின் கிரிக்கெட் சபைத் தலைவர் ரமீஸ் ராஜா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நியூசிலாந்து அணியைத் தொடர்ந்து இங்கிலாந்தும் தொடரிலிருந்து விலகியுள்ளமை வருத்தத்தக்கது. ஆனால், இதை நாங்கள் எதிர்பார்த்ததுதான் இருந்தோம். நியூசிலாந்து தொடரிலிருந்து விலகுவதாக சொன்னபோதே, எந்த மாதிரியான பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இருந்தன என்பதை எங்களிடம் பகிர்ந்து கொள்ளவில்லை.

இப்போது இங்கிலாந்து, நியூசிலாந்து போல ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியும், பாகிஸ்தானுக்கு வர தயக்கம் காட்டி வருகிறது. அவர்கள் மூவரும் ஒரே மேற்கத்திய கோஷ்டியைச் சேர்ந்தவர்கள். எங்களை அவர்கள் இன்னும் தங்களில் ஒருவராக ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. ரி20 உலகக் கிண்ணத்தைப் பொறுத்தவரை நாங்கள் ஓர் அணியை மட்டும்தான் நாங்கள் இலக்கு வைத்திருந்தோம். ஆனால் இப்போது அந்தப் பட்டியலில் மேலும் இரு அணிகள் சேர்ந்துள்ளன. அவை நியூசிலாந்தும் இங்கிலாந்தும்தான். அவர்களை நாங்கள் மைதானத்தில் பழி தீர்ப்போம் என்றார்.

ரி20 உலகக் கிண்ணத் தொடரில் இந்தியாவும் பாகிஸ்தானும் ஒரே பிரிவில் இடம்பிடித்துள்ளன. ரமீஸ் ராஜா, 'ரி20 உலகக்கிண்ணத்தைப் பொறுத்தவரை நாங்கள் ஒரு அணியை மட்டும்தான் நாங்கள் இலக்கு வைத்திருந்தோம்' என்று தெரிவித்துள்ளமை இந்திய அணியைப் பற்றியதாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. (ம)

# அதிகம் சம்பாதிக்கும் வீரராக ரொனால்டோ!

லிஸ்பன், செப். 25

அதிகம் சம்பாதிக்கும் வீரர்களின் வரிசையில் 2021 - 2022 பருவகாலத்தில் மெஸ்ஸியை ரொனால்டோ பின்தள்ளியுள்ளார் என்று பிரபல பத்திரிகை செய்தி வெளியிட்டது.

கால்பந்தாட்ட உலகில் முடிசூடா மன்னர்களாக ரொனால்டோ, மெஸ்ஸி இருவரும் விளங்கு கின்றனர். கோல்கள், விளம்பரங்கள், விருதுகள் என்று எதற்கெடுத்தாலும் இந்த இருவருக்கும் இடையில் கடும் போட்டி நிலவும். இந்த நிலையில் இந்தப் பருவகாலத்தில் அதிகம் சம்பாதிக்கும் வீரர்களின் பட்டியலில் ரொனால்டோ மெஸ்ஸியைப் பின்தள்ளியுள் ளார். ரொனால்டோ 125 மில்லியன் டொலரையும், மெஸ்ஸி 110 மில்லியன் டொலரையும் இந்தப் பருவகாலத்தில் வருமானமாகப் பெறவுள்ளனர். (ம)

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை வடக்கு வீமன்காமம் (டச்சு றோட்) பகுதியில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப்பாதையுடன். பார்வையிடும் நேரம் காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை, தரகர் தேவையில்லை.

077 814 7389, 077 614 7333


## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம், இரண்டாம் ஒழுங்கையில் 20 அடி பாதையுடன் 12 பரப்புக் காணி சட்டபூர்வமாக சகல ஆவணங்களுடன் விற்பனைக்கு உண்டு. இரண்டு (02) பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.
(யாழ் பஸ் நிலையத்தில் இருந்து 2 K.M தூரம்). தொடர்புகொள்ளும் நேரம் காலை 9.00-மாலை 6.00 மணிவரை)
ஒரு பரப்பின் விலை ஆறு லட்சம்.

076 221 2037, 077 288 0152
076 734 1023

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 02 . 1942



மறைவு 23 . 09 . 2021

### கதிரவேற்பிள்ளை விவேகானந்தராசா

ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர், மக்கள் வங்கி வட மாகாணம்

வட்டுக்கிழக்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கிழக்கு சித்தன் கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேற்பிள்ளை விவேகானந்தராசா அவர்கள் நேற்று முன்தினம் (23.09.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கதிரவேற்பிள்ளை மங்கையற்கரசி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான Dr. கெங்காதரம்பிள்ளை தபோதினி தம்பதியரின் அன்பு மருமகனும், தர்ஷினி, மதனராஜ், சுகிர்தலா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ஸ்ரீபரன் வித்யா, பார்திபன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கிரிஷிகா, கிரிசன், பூர்விகா, விகான், கிரிஷ்வி ஆகியோரின் பாசமிகு பேரனும், தனலட்சுமி, வள்ளிநாயகியம்மா, இராஜகுலேந்திரன், கணேசராசா, அருணகிரிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் லோகேஸ்வரி, Dr. விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2021) சனிக்கிழமை மாலை 6.00 மணியளவில் சுகாதார விதிமுறைகளை பின்பற்றி கோம்பயன் மணல் இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வட்டுக் கிழக்கு,
சித்தன்கேணி

தகவல் : குடும்பத்தினர்
தொ.பே. 021 225 2627




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.